
# ஆறு நாட்டு வேளாளர் திருமண முறைகள்



ஆக்கம்

திரு. ச. முத்தையா பிள்ளை

நாவலப்பிட்டி

இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு நாட்டு வேளாளர் திருமண முறைகள்

ஆக்கம்

திரு. ச. முத்தையா பிள்ளை
நாவலப்பிட்டி
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகம் பற்றிய குறிப்புகள்


| | |
|---|---|
| புத்தகத்தின் பெயர் | ஆறுநாட்டு வேளாளர் திருமண முறைகள் |
| Book title : | ARUNATTU VELALAR WEDDING SYSTEMS |
| எழுதியவர் | எஸ்.முத்தையா பிள்ளை |
| முன் அட்டை படம் | மீனாட்சி சுந்தரேஸ்வரர் கல்யாணம் |
| புத்தக அளவு | *21 x 13* செ.மீ |
| பயன்படுத்திய தாள் | *70* ஜி.எஸ். எம் |
| அச்சுப்பதிப்பு | பிரிண்ட்ஸ் அண்டு ஃபுரூப்ஸ் சென்னை-*8*. |
| பக்கங்கள் | *100* |
| அச்சேற்றிய காலம் | *15-09-1993* |
| உரிமை | எழுதியவருக்கு |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



ச. முத்தையா பிள்ளை

ஸ்ரீலங்கா ஸ்டோர்ஸ்
நாவலப்பிட்டி
ஸ்ரீலங்கா

திண்ணனூர்
துறையூர் தாலுகா
திருச்சி மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சிகளை எனது மனக்கண் முன் நிறுத்தினேன். அப்போது எனக்கு பத்து, பன்னிரெண்டு வயதிருக்கும். பள்ளிக்கூடம் செல்லும் வயது. அந்த வயதிலும், யாராவது சில காரியங்கள் செய்தால் ஏன்? எதற்கு? எப்படிச் செய்கிறார்கள் என்று சிந்தித்து கவனிப்பேன். எங்கள் உறவினர்கள் வீட்டில் நடக்கும் மங்கள காரியங்களுக்குச் செல்வேன். அப்பொழுது இதை அவர்கள் ஏன் செய்கிறார்கள்? மற்றவர்கள் செய்யக்கூடாதா என்றெல்லாம் சிந்திப்பது வழக்கம். யாரிடமும் கேட்பதில்லை. கேட்டால், உனக்குத் தெரியாது என்பார்கள். தெரிந்து என்ன செய்யப் போகிறாய் என்று முடித்து விடுவார்கள்.

அந்தக் காலத்தில் இருந்தே சில காரியங்களுக்கு எப்படியாவது விளக்கம் கேட்டு விசாரித்து விடுவேன். இன்னும் தெரியாத விஷயங்களை அக்காலத்தில் இருந்தே அறிந்து கொள்ளும் ஆவலுடன் இருப்பேன். அப்படியும் அறியாதவற்றை தொண்ணூறு வயது நிறைந்த பெரியவர் ஒருவரிடம் கேட்டபோது அவர் சிலவற்றுக்கு விளக்கம் அளித்தார். அவர் எங்கள் கிராமத்தில் அந்தக்காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்தி வாத்தியார் என்ற பட்டப்பெயரை தனதாக்கிக் கொண்ட அருணாசலம் பிள்ளையாவார். இவர் நமது சமூக பூர்வீக வரலாறுகள் பற்றிச் சுருக்கமாகக் கட்டுரை எழுதியுள்ளார்.

இன்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்பு நடந்தவற்றைப் பற்றித் தெரிந்து வைத்து அவற்றை எழுதக்கூடியவர்கள் இன்று விரல் விட்டு எண்ணும் அளவில் கூட இல்லை. ஆனால் நமது சமூகம் இன்னும் பல நூறு ஆண்டுகளுக்கு வாழ்வாங்கு வாழும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. இன்னும் நூறு ஆண்டுகளுக்குப் பின்பு இன்றைய செயற்பாடுகள் பழமையாகிவிடும். அந்தப் பழமை சில வேளை புதுமையாகவும் சிறந்தவையாகவும் மாறலாம் அல்லவா..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு முன்னால் சில காரியங்கள் எப்படி பழமை வாய்ந்தனவாக இருந்தன என்பதை, எனக்கு முன்பு பெரியவர்களும் அறிவாளிகளும் கூறியவற்றிலிருந்து எடுத்து தொகுத்து, நமது சமூகத்திற்கு உதவக்கூடிய வகையில் கூறியுள்ளேன். இச் சிறுநூல் சமூக வளர்ச்சிக்கு தூண்டுகோலாக வேண்டும் என இறைவனை வணங்குகிறேன்.

ச. முத்தையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெ.இராதாகிருஸ்ணன்
தலைவர்
ஆறுநாட்டு வேளாளர் சபை
கொழும்பு

நம்மின பெரியார் நாவலப்பிட்டி திரு.ச.முத்தையா பிள்ளை அவர்கள் தொகுத்து வழங்கியுள்ள ஆறுநாட்டு வேளாளர் திருமண முறைகள் என்ற இந்த நூல், நம்மிடையே இருந்து வந்த நீண்ட நாளைய குறையை நீக்கியுள்ளது. இம் முயற்சி பெரும் பாராட்டுதலுக்கும், மகிழ்ச்சிக்கும் உரியதாகும்.

நம் திருமண வைபவங்களின் போது, சில சமயங்களில் முறைகளில் வேறுபாடு ஏற்படுவது உண்டு. இப்படியான குறைகளையும் நீக்கி எல்லோரும் ஒரே முறையாக செயற்பட உதவியாக இருப்பதோடு அல்லாமல் திருமணத்தை நடத்தி வைக்கும் குருக்களுக்கும் பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந் நூல் நம்மினத்தோர் வீடுதோறும் இருக்க வேண்டியதொன்றாகும் என்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

விஜேராம மாவத்தை
கொழும்பு 7

பெ.இராதாகிருஸ்ணன்
(ரெ.புதுப்பட்டி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.வை.பெரியசாமிபிள்ளை
காப்பாளர்
ஆறுநாட்டு வேளாளர் சபை
சம்மாங்கோட்டு மாணிக்க
விநாயகர் கோவில்

நமது ஆறுநாட்டு வேளாளர் சபையை நமது சமூக மேம்பாட்டிற்குப் பல உதவிகளையும், வசதிகளையும் செய்வதற்கு பத்தாண்டுகளுக்கு முன் ஆரம்பித்து வைத்தோம். பல வறிய மாணவ மாணவிகளுக்கு கல்விக்கான உபகாரநிதி வழங்கியும் வசதியற்றவர்கள், இயலாதவர்களுக்கு உதவிகள் செய்தும் வருகின்றோம்.

அவ்வகையில் இந்த ஆறுநாட்டு வேளாளர் சமூகத் திருமண முறைகள் என்ற நூலை எழுதி சமூகவளர்ச்சி குன்றாமல். தொன்றுதொட்டு வரும் பழங்கால சம்பிரதாய முறைகளைப் பின்பற்ற வேண்டும் என நினைத்து வசதியற்றவர்களும், வசதியுள்ளோரும் முறை தவறாமல் நமது பண்பாட்டிற்கும் பழக்கத்திற்கும் ஏற்றபடி வாழவேண்டும் என இந்நூல் வெளியிட முடிவு செய்தோம்.

நமது சமூகத்தில் அவரவர்களுக்கு மனதில் பட்டதைச் செய்கிறார்கள். ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு முறையாகச் செய்கிறார்கள் எது சிறந்தது? அவற்றை எதற்காகச் செய்கிறோம்? என்பது சிலருக்குப்புரியாமலே செய்து வரும் இக்காலத்தில் இம்மாதிரியான நூலை எழுதி வெளியிட்டு வைத்தமை இறைவன் செயல்தான். அவன் அருளாலே அவன் தான் வணங்கி, எந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மையான காரியம் செய்தாலும் நன்மையாகவே முடியும். அதன்படி நமது சமூக வளர்ச்சி குறையாமலும் மாறாமலும் எளிதாகத் திருமணம் செய்ய இந்நூல் பெரிதும் உதவும் என நினைக்கிறேன்.

பேங்சால் வீதி
கொழும்பு 11
*16.06.90*

இப்படிக்கு,
வை.பெரியசாமிபிள்ளை
(அடைக்கம்பட்டி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி விஜயலட்சுமி தேவராஜ்
பாமன்கடை வீதி,
கொழும்பு - 6

எமது சமூகத்துத் திருமண முறைகளைப் பற்றி எழுதப்பட்டுள்ள நூலில் எனது எண்ணங்களையும் பகிர்ந்து கொள்வது எனக்கு மகிழ்ச்சி தருகிறது.

ஆறுநாட்டு வேளாளர்களின் திருமணங்களின்போது நடைபெறும் சடங்குகள் நீண்டகாலமாக எமது பெரியோர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தவை. இன்று ஒவ்வொரு திருமணத்தின் போதும் இவை கடைபிடிக்கப்பட்டாலும் சில வேளைகளில் திருமணம் நடந்து கொண்டிருக்கும்பொழுதோ அல்லது பெண் அழைப்பு அல்லது நிச்சயதார்த்தம், திருவாதிரை போன்ற சடங்குகளின் பொழுதோ பெரியவர்கள் ஒருவருக்கொருவர் முன்னுக்குப்பின் முரணாக விளக்கங்கள் தருவதைப் பார்க்க வேடிக்கையாக இருக்கும். காரணம் என்னவென்றால் இவர்களுக்கே இதுபற்றி சரியாக தெரியாமல் இருப்பதுதான்.

இவை அனைத்திற்கும் முற்றுப் புள்ளி வைக்கும் நோக்கத்தோடு, திரு.முத்தையாபிள்ளை அவர்கள் கோத்திர விளக்கங்களிலிருந்து மணமகனும் மணமகளும் புதிய இல்லற வாழ்க்கையைத் தொடங்குவது வரையுள்ள சடங்குகளைப் பற்றித் தெளிவாக விளக்கியுள்ளார்.

இந்த நூலை ஆரம்பத்திலிருந்து வாசித்த பொழுது ஒவ்வொரு சடங்கும் காரணத்தோடு விளக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. சமபந்தி விருந்து என நாம் வழமையாகக் கூறுவது, பெண்வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டாரும் சமமாக ஒரே பந்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்து விருந்து உண்பது போன்ற பல விளக்கங்களும் இன்றைய அடைசுற்றுதல், அரசுபடைத்தல், கோத்திரம் சொல்லுதல் போன்றவையும் அனைவருக்கும் புரியும்படி தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

ஆறுநாட்டு வேளாளர் சமூகத்தின் திருமண மரபைப் பேணும் நோக்கத்துடன் அவர்களின் சடங்குகள் நூல்வடிவில் வெளிவருவது மகிழ்ச்சிக்கும் பாராட்டிற்கும் உரியதாகும். இந்த நன்முயற்சியை மேற்கொண்ட திரு.ச.முத்தையா பிள்ளை அவர்களை எமது சமூகத்தினர் நன்றியோடு நினைவு கூறுவார்கள் என எண்ணுகின்றேன்.

கொழும்பு-6 திருமதி.விஜயலட்சுமி தேவராஜ்
26.10.90 (எடையப்பட்டி மணச்சநல்லூர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.ஏ.கே.சுப்பையா
முன்னாள் செயலாளர்
ஆறுநாட்டு வேளாளர்சபை
கொழும்பு

பண்டைக் காலம் முதல் இன்று வரை ஒவ்வொரு இனமும் தனது மக்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றுவதைச் சரித்திர வாயிலாக நாம் காணமுடிகிறது. தனது இனத்தின் தனித்துவத்தை உயர்ந்த இடத்தில் வைத்துக்கொண்டு ஏனையோருடன் இணைந்து ஒற்றுமையாக வாழ்வது சாலச் சிறந்ததாகும். எமது கலை, கலாச்சாரம், பாரம்பரிய வழிபாட்டுமுறை, திருமணச் சடங்குகள் முறை போன்றவற்றில் வாழையடி வாழையாக அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறோம். காலப்போக்கில் சிலமாற்றங்கள் ஏற்பட்டிருப்பினும் அடிப்படை அம்சங்களில் பாரம்பரிய குணாதிசயங்களை நாம் காண முடிகிறது. நம்மிடையே வேற்றுமைகள் காணப்படினும் சமய அனுஷ்டானங்களிலும் திருமண வைபவங்களிலும் ஒரே சீரான முறையில் வழிமுறைகளைச் செய்வதே சாலச் சிறந்ததாகும். கிழக்கு மேற்கென்று பிரிவினைகள் வைத்துக் கொண்டு ஒரே வைபத்தைப் பல்வேறு வகைகளில் நடத்துவதை நாம் கண்டு வியப்புற்று, கலங்குகின்றோம்.

இவ்வகையில் திருமண வைபவத்தை ஆரம்பகால முதல் இறுதிவரை எவ்வாறு நடத்துவது என்று படிபடியாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நாவலப்பிட்டி திரு.முத்தையா அவர்கள் ஆறுநாட்டு வேளாளரின் திருமணச் சடங்கு முறைகளைப் பற்றி எழுதியிருப்பதை நாம் அனைவரும் வரவேற்க வேண்டும்.

எல்லோராலும் படித்து சுலபமாகப் பின்பற்றக்கூடிய வழிமுறைகளை மிக எளிமையான நடையில் கூறியிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

வாசல ரோடு,
கொழும்பு-13

ஏ. கே. சுப்பையா
(பொட்டிரெட்டிபட்டி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. P. P. தேவராஜ்

இந்து சமய கலாசார இராஜங்க அமைச்சர்

கொழும்பு, ஸ்ரீலங்கா



## வாழ்த்துரை

ஆறுநாட்டு வேளாளர்களின் திருமண முறைகள் அச்சுப்பதிப்பாக நூலுருவில் வெளிவருவது கண்டு மிகுந்த மகிழ்வடைகிறேன்.

இந்துப் பண்பாட்டு வாழ்க்கை நெறியின் சடங்கு, சம்பிரதாயங்கள் ஆழமான அர்த்தம் நிறைந்தவை. பல தலைமுறைகளாக நிலவி வரும் மரபுகளும் வழக்குகளும் இனிமை கூட்டி இன்பம் ஊட்டி வாழ்வினைச் சுவை மிக்கதாய் ஆக்குவதில் பெரும்பங்கு வகிக்கின்றன. அத்துடன் பழமையான வாழ்வு முறைகளோடு இன்றைய வாழ்வை இணைத்து அதன் பின்னணியில் மென்மையான ஒரு இழையோட்டமாக எமது பண்பாட்டைப் பேணிக்காத்து வருவதையும் உணர்த்துகின்றன. இது, ஒரு செழித்துத் தழைத்த விருட்சத்தின் ஆணிவேர்போல, அறுந்து போகாத தொடர்பாக நிலைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்களிடையே ஒவ்வொரு சமூகக் குழுக்கூட்டமாக வாழும் மக்களின் சடங்கு முறைகள் வேறுபாடுகளையும், வித்தியாசங்களையும் கொண்டிருக்கக்கூடும். ஆனால் அவை வாழ்க்கையை அன்பும் நற்பண்புகளும் மிக்கதாக ஆக்குவதையே முதன்மையாகக் கொண்டவை. வித்தியாசங்களுக்கு மத்தியிலும் எல்லா இந்துத் திருமண முறைகளும் அடிப்படையில் ஒருங்கிணைப்பைக் கொண்டுள்ளமையை நாம் காணலாம்.

இந்நூலில் அமைந்துள்ள ஆறுநாட்டு வேளாளர்களின் திருமண-முறைகள், மிக அழகாகவும் தெளிவாகவும் விளக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது. திருமணச் சடங்குகள் பற்றி அனைவரும் அறிந்திருந்தாலும் அவற்றின் உள்ளார்ந்த தத்துவங்களையும் இலகுவில் புரிந்துகொள்ள இயலாதிருந்த நிலையை, இந்நூல் இலகுவில் போக்கிவிடும். சடங்கு முறைகள் தத்துவார்த்த நோக்கில் விளக்கப்பட்டுள்ளமையால் இச்சமுதாயத்தைச் சேர்ந்த இன்றைய இளையோருக்கும் எதிர்காலத் தலைமுறையினருக்கும் பயன் மிக்கதாக இவை அமையும்.

அந்த வகையில், நமது சமூகத்துத் திருமண முறைகளை நூலுருவில் கொண்டுவர முயற்சி மேற்கொண்டவரும் இந்நூல் ஆசிரியருமான திரு. ச. முத்தையாபிள்ளை அவர்களை மனமாரப் பாராட்டுகின்றேன்.

பாமன் கடைவீதி
கொழும்பு 6.
26.10.90

பி.பி.தேவராஜ்
எடையப்பட்டி
(மண்ணச்சநல்லூர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.ம.திருப்பதி பிள்ளை
ஆறுநாட்டு வேளாளார் சபையின்
அங்கத்தவர் தெரிவாளர்
தலைவர் சம்மாங்கோடு மாணிக்க
விநாயகர் சுவாமி கோயில்
கொழும்பு 11

சிறப்பு மிக்க நமது சமூகத்தவர்களே

நமது சமூக சபை அங்கத்தவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க திரு.ச.முத்தையாபிள்ளை நமது சமூக மரபு முற்காலத்திலிருந்து எப்படி வளர்ந்து வாழ்ந்து வீறு நடை போட்டு வளர்ச்சி அடைந்துள்ளது என்பதையும், எப்படி உறவு முறையாகும் என்பதையும் விளக்கியுள்ளார். திருமணத்தில் செய்யக்கூடிய காரியங்களை எதற்காகச் செய்வது என்ற விளக்கத்துடன் கற்றோரும் மற்றோரும் விளங்கி, திருமணக் காரியங்களைச் சிறப்பாகச் செய்து கொள்ள இப்புத்தகம் மிகவும் பயன் தரும். இப்பேர்ப்பட்ட புத்தகத்தை முன்வந்து தொகுத்து எழுதிய ச.முத்தையாபிள்ளை அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இலங்கையில் ஆறுநாட்டு வேளாளார் திருமணமுறை என்ற புத்தகத்தைப் பிரசுரித்து வெளியிட்டதற்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஹைபாக்கோனர்
கொழும்பு 2
10.01.91

ம.திருப்பதி பிள்ளை
(திண்ணனூர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அ. துரைசாமி பிள்ளை**

தலைவர்

மத்திய மாகாண இந்துமாமன்றம்

கண்டி

ஆறுநாட்டு வேளாளர் திருமண முறைகள் நூல்வடிவில் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியதே.

வாழையடி வாழையாகக் கடைப்பிடித்து வருகின்ற நமது திருமணச் சடங்கு முறைகள் முறைப்படி நடைமுறையில் நடத்த இந்நூல் பேருதவியாகவும் இருக்கும்.

மேலும் நமது இளஞ்சந்ததியினருக்கு முறை பிறழாது திருமணங்கள் நடத்தப் பேருதவியாகவும் இருக்கும். நீடித்து நிலைத்திருக்கப் பெரிதும் உதவும் என்றபடியால் இது நமது சமூகத்தார் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டிய கைநூலாகும்.

ஆறுநாட்டு வேளாளர்களின் சடங்கு முறைகள் மிகமிகத் தத்துவார்த்தங்களைக் கொண்டிருப்பதால் இந்நூலின் வெற்றிகரமான வெளியீட்டிக்கு இறை அருள் கிட்டுமாக.

கொழும்பு வீதி
கண்டி

அ. துரைசாமி பிள்ளை
(சூரிய மாணிக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மரு. வையாபுரி பிள்ளை
தலைவர்
ஆறுநாட்டு வேளாளர் சங்கம்
திருவானைக்காவல்

## மதிப்புரை

திருவாளர் ச. முத்தையாப்பிள்ளை அவர்கள் இப்புத்தகத்தில் ஆறுநாட்டு வேளாளர் திருமணச் சடங்குகளைப் பற்றி மிக அழகாகவும், நல்ல தமிழ் நடையில் தெளிவாகவும், நன்கு எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையிலும் எழுதி இருக்கிறார்கள்.

இப்புத்தகம் அனைவரும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்று. திருமண உறுதி செய்தல் (நிச்சயதார்த்தம்) முதல் சனியாறு விருந்து வரை விடாமல் ஒவ்வொரு சடங்கையும் தெள்ளத் தெளிவாய் எழுதியிருப்பதை பெருமகிழ்ச்சியுடன் பாராட்டுகிறேன்.

நான் மலேசியாவில் ஒரு திருமணத்திற்கு சென்றிருந்த பொழுது அங்கு யாருக்குமே இச்சடங்குகள் குறித்து ஒன்றுமே தெரியவில்லை, அரசாணிப் பூசாரியும் இல்லை. என்றாலும் திருமணத்தை முறைப்படிச் செய்ய வேண்டும். என்னும் ஆர்வத்திற்கோ சிறிதும் குறைவில்லை. கடைசியில் எனக்குத் தெரிந்த வரை நானே முன்னின்று முடிந்தவரை செய்து கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

இப்புத்தகம் எல்லாருடைய தேவையையும் ஆவலையும் நிறைவு செய்வதோடல்லாமல் குறிப்பாக வெளி நாட்டில் உள்ளவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில குறைகளையும் தீர்த்து வைக்கும் என்பதில் ஐயமில்லை. அரசாணிப் பூசாரி வேலை தெரியாதவர் கூட இப்புத்தகத்தை வைத்துக் கொண்டு சடங்குகளைச் செம்மையாகச் செய்யலாம். அதனால் ஒவ்வொருவரிடமும் இப்புத்தகம் இருத்தல் நல்லது.

திரு.ச.முத்தையாப்பிள்ளை அவர்களுக்கு என் பாராட்டுகள்!

*14, கிடங்கு தெரு* (மரு.வையாபுரி பிள்ளை)
சென்னை நா. கருப்பம் பட்டி
*15.01.1993.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ச.முத்தையா*
*ஸ்ரீலங்கா ஸ்டோர்ஸ்*
*31, கொத்மலை வீதி*
*நாவலப்பிட்டி*

## என்னுரை

உலகம் தோன்றிய காலத்தில் இருந்து இந்துமதம் தோன்றியுள்ளது என்பதற்கு சாட்சி வேண்டியதில்லை. உலகத்திற்கும் இந்துமதத்திற்கும் பிறந்தநாள் இல்லை. இந்து மதத்தைப் பற்றி அறியாமல் பலர் இருக்கலாம்.

1976-ம் ஆண்டு மலேஷியாவில் கோலாலம்பூரில் அகில உலக இந்து மகாநாடு நடைபெற்றது. அம்மகாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பு அடியேனுக்கும் கிடைத்தது. இலங்கைப் பிரதிநிதிகளுக்கு மலேஷிய வானொலியில், மதம் மனிதனுக்கு எவ்வளவு முக்கியம் என்பது பற்றிப் பேசும் வாய்ப்பைக் கொடுத்தனர்.

அகில உலகத்திற்கும் மனிதனுக்கும் மதம் எந்த அளவிற்கு உதவுகிறது என்பது பற்றி நான் பேசியதை ஒரு வாரத்திற்குப் பிறகு ஒலி-பரப்பினார்கள். நமது இந்து மதத்திற்கு நிகராக சமுத்திரம் என்ற பெருங் கடலைக் கூறலாம். ஏனெனில் இந்து மதத்தில் யார் வேண்டுமானாலும் வரலாம். போகலாம். கடலும் அப்படித்தான். எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளும். எவ்வளவு எடுத்தாலும் குறையாது.

இவ்வாறு சிறப்புற்று விளங்கும் இந்துமதத்தில் நமது ஆறுநாட்டு வேளாளர் சமூகம் உள்ளடங்கியிருப்பது பெருமைக்குரியதாகும். இந்துமதத்திலும் கடவுளைபற்றிய சிந்தனையோ பற்றோ இல்லாமல் இருப்பவர்களும் இருக்கலாம். அவர்களிடத்தில், நீர் இந்துமதமா என்று கேட்டால் போதும். அவர்களுக்கு ஏற்படும் கோபத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க வேண்டுமே! ஆகவே அவர்களையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. நான் இந்து மதத்தில் இல்லை என்று மற்றவர்கள் எப்படிச் சொல்லமுடியும் என்ற உணர்வு அவர்களுக்கும் இருக்கிறது.

நமது சமூகத்திற்குள் இருக்கும் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை நாம் எல்லோரும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். இயலுமானவரையில் நம்மைப் பற்றி நாமே தெரிந்து வைத்திருப்பது மிக அவசியமாகும்.

முன்னொரு காலத்தில் ஓர் மன்னன் இருந்தான். அவனுக்கு இறுதிக் காலத்தில் இவ்வுலகத்தில் இருக்கும் மனித வாழ்க்கைச் சரித்திரத்தைத் தெரிந்து கொள்வதற்கு ஆசை ஏற்பட்டது. உடனே, மந்திரியை அழைத்து, மனிதனுடைய சரித்திரத்தைப் பற்றி விபரமாகவும் விளக்கமாகவும் எழுதி வருபவர்களுக்கு மன்னர் பரிசளிப்பார் என பறைசாற்றும்படி கட்டளையிட்டார். நாட்டில் உள்ள எழுத்தாளர்கள் எல்லாம் எழுதிக்கொண்டு வந்தார்கள். எழுதியவற்றை ஒன்று சேர்த்தால் புகைவண்டியில் கொண்டு வரக்கூடிய அளவு நிறைந்துவிட்டது. இதைப் பார்த்த மன்னர், தான் இதைப் படித்து முடிக்குமுன் இறந்து போகும் நிலை வந்துவிடும் என்றும், ஆதலால் இதைச் சுருக்கி எழுதிவரும்படியும் கூறினார். அதன் பின்பு எழுதப்பட்டவை ஒரு லாரியில் அடங்கும்படியாக இருந்தன. அப்போது மன்னருக்கும் சற்று வயதாகி விட்டது. மீண்டும் சுருக்கி எழுதி வரும்படி கட்டளையிட்டார். அவ்வாறு வந்தவை ஒரு வண்டியில் அடங்கக் கூடியதாக இருந்தது. இப்போது மன்னர் படுக்கையில் இருந்தார். மீண்டும் அதைச் சுருக்கி ஒரு புத்தக அளவில் கொண்டு வரும்படி கூறினார். ஒவ்வொரு எழுத்தாளரும் ஒரு புத்தக வீதம் கொண்டு வந்தனர். அப்போது மன்னருக்குக் கண்பார்வை குறைந்து விட்டது. ஆசை நிறைவேறவில்லை. இறுதியில் ஒருவர், தான் மூன்று வரியில் எழுதி, அதை அரசருக்குத் தானே வாசித்துக் காட்டுவதாகக் கூறினார். மன்னருக்கும் சந்தோஷம் ஏற்பட்டது. உடனே எழுதி வாசிக்கும்படி கூறினார். அந்த நபர் எழுதி வாசித்த மூன்று வரிகளாவன:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் பிறந்தான்,

அவன் வாழ்ந்தான்,

அவன் இறந்தான், என்பதாகும்.

இதைக் கேட்ட மன்னர் வாசித்தவருக்குப் பரிசு கொடுக்கும்படி கூறிவிட்டு இறந்துவிட்டார். ஆகவே நமது சமூகத்தைப் பற்றி ஆராய்ந்து, செய்யுங் காரியங்களை எழுதித் தருவது மிகவும் கஷ்டமானது. எனவே எம்மால் இயலுமானவரை ஓரளவேனும் எல்லாவற்றையும் தெரிந்து வைத்துக் கொள்வது பெரும் நன்மையாகும்.

இலங்கையில் நம் சமூகத்திற்கு ஒரு சபையை ஆரம்பித்து வழி நடத்திய மூத்த தலைவர்கள் சிலர் நமது சமூக திருமணச் சடங்கு முறைகளை எழுதி வெளியிட வேண்டும் என வற்புறுத்தினார்கள். அதன்படி ஆராய்ந்து சிந்தித்து, எழுதி நிர்வாக சபையில் சமர்ப்பித்தேன். சில திருத்தங்களுடன் புத்தகமாக அச்சிட்டு வெளியிட சபை ஏகமனதாக ஒப்புதல் அளித்தது.

அவர்களுக்குப் பின்பு வந்தவர்களும் நிர்வாக சபையினரும் வேறுபல வேலைத் திட்டங்களையும் விழாக்களையும் நடத்தினார்கள் சமூகத் திருமணப் புத்தகம் அச்சிட ஆர்வம் காட்டவில்லை. எமது சமூகத்தில் பலர் என்னை அடிக்கடி வற்புறுத்தினார்கள். அதற்கு மேலும் உறுதுணையாக அதிக பிரதிகளை வாங்கி விநியோகிப்பதாக கூறி கண்டி முருகன்ஸ் திரு வை. மாரிமுத்து பிள்ளை அவர்கள் ஊக்கப்படுத்தினார்கள். அதனால் எனது முயற்சியை கை விடாமல் நானே அச்சிட்டு வெளியிட தீர்மானித்தேன். அன்பர்கள் இதனை வாசித்து தெரிந்து உங்கள் கருத்துக்களையும் இதன் குறை நிறைகளையும் எழுதி அனுப்புங்கள். அவை இன்னும் நமது சமூகத்திற்குத் தேவையானவற்றைச் செய்வதற்குத் தூண்டுகோலாக அமையும்.

சுமார் பத்து வருடங்களுக்கு முன்பே இவ்வாறு ஒரு புத்தகம் வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தையும் துடிப்பையும் அடிக்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு நினைவூட்டியவரும் அன்போடு நூர்ஜகான் என்று சொல்லப்படுபவருமான திரு.கா.பொ.பெரியசாமிபிள்ளை, (சேர்குடி) அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் எழுத்துப்பிழை, சொற்பிழைகளைத் திருத்தி உதவிய ஆசிரியை செல்வி.மகாலட்சுமி கணேஷ் (கதிரேசன் குமார மகா வித்தியாலயம். நாவலப்பிட்டி) அவர்களுக்கும் பல கையெழுத்துப் பிரதிகளை எழுதி உதவிய எனது மகள் செல்வி மு.பவானி B.Sc அவர்களுக்கும், மதிப்புரை வழங்கியவர்களுக்கும் இந்நூலைப் பதிப்பித்து தாமதமின்றி வழங்கிய அச்சக உரிமையாளர் த. ஜெகந்நாதன் [ ரெ. புதுப்பட்டி (லேட்) திரு. தர்மலிங்கம் பிள்ளை அவர்களின் புதல்வன்] அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எமது சமூகத்தினர் பலரும் பலவிதமாகச் சடங்குகள் பலவற்றைச் செய்து வந்தாலும் எல்லோரும் ஒரே விதமாகச் செய்வதற்கும் பழங்காலத்தில் செய்யப்பட்ட முறைகளுக்கும் சில விளக்கங்களையும் அளித்துள்ளேன். இன்னும் பலவற்றுக்கு விளக்கமும் காரணங்களும் கிடைத்தால் அடுத்த பதிப்புகளில் அவையும் சேர்க்கப்படும் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே நமது வேலையை நாமே தெரிந்து கொள்ளும்படி அரசாணி பூசாரியும் கூட நமக்கு நாமே செய்து கொள்ளக்கூடியவாறு அமைய வேண்டும் என்பதே எனது பேரவா.

ஸ்ரீலங்கா ஸ்டோர்ஸ்
நாவலப்பிட்டி

எஸ்.முத்தையாபிள்ளை
(திண்ணனூர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஆறு நாட்டு வேளாளர் திருமண முறை என்ற நூல், நமது முற்கால சந்ததியினரின் கலாசார வழி முறைகள் தவறாமல், எதிர்கால சந்ததியினருக்கு உதவக்கூடிய முறையில், விளக்கமுடன் எழுதப் பட்டுள்ளது. புதிய கலைச் சொற்களை தவிர்த்து, நமது சமூகத்தின் தனித்துவ மரபு மாறாமல், ஆழ்ந்த சிந்தனையுடன், அறிவுத் திறனுடன் இனிய தமிழில் எளிய தன்மையில் தொகுத்து வெளியிட ஆர்வம் கொண்டுள்ளார் இந்நூல் ஆய்வாளரும் ஆசிரியருமான திரு. ச. முத்தையா பிள்ளை அவர்கள். அவர்களின் தொண்டு மகத்தானது. பெரும் மதிப்புள்ள இந்நூலை அச்சிட்டு வழங்குவதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

**PRINTS & PROOFS**
33, Police Commissioner Office Road,
Egmore, Madras-600 008..

த. ஜெகநாதன்
(ரெ. புதுப்பட்டி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் எண் |
|---|---|---|
| 01. | விநாயகர் வழிபாடு | 01 |
| 02. | குரு வழிபாடு | 02 |
| 03. | அற்புதத் திருப்பதிகங்கள் | 03 |
| 04. | திருநீற்றுக் திருப்பதிகங்கள் | 04 |
| 05. | நமச்சிவாயத் திருப்பதிகங்கள் | 05 |
| 06. | அபிராமியம்மைப்பதிகம் | 06 |
| 07. | பஞ்சபுராணப் பாடல்கள் | 07 |
| 08. | திருப்புகழ் | 09 |
| 09. | பூர்வீக வரலாற்றுச் சுருக்கம் | 10 |
| 10. | கோத்திரங்களும் விளக்கங்களும் | 10 |
| 11. | திருமணத்திற்கு முதற் கடமை | 11 |
| 12. | நிச்சயதார்த்தம் | 12 |
| 13. | பொட்டு வைக்கும் முறை | 14 |
| 14. | நெல் அளப்பு நிகழ்ச்சி | 14 |
| 15. | தாய் மாமன் நடத்தி வைக்கும் திருவாதிரை கல்யாணம் | 16 |
| 16. | பெண் அழைப்பு | 19 |
| 17. | திருமணத்திற்கு முன் சில விளக்கங்கள் | 20 |
| 18. | கடைசிக்கு முதல் விளக்கம் | 24 |
| 19. | மணவறையில் இருக்க வேண்டிய பொருட்கள் | 26 |
| 20. | புண்ணியவாசம் | 27 |
| 21. | முகூர்த்தக்கால் நடல் | 28 |
| 22. | மாமன் ஆசீர்வாதம் வழங்குதல் | 29 |
| 23. | அரசு படைத்தல் | 30 |
| 24. | அடை சுற்றுதல் | 31 |
| 25. | காப்பு என்ற கங்கணம் கட்டுதல் | 34 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் எண்

26. மாப்பிள்ளை கோவிலுக்கு செல்லுதல் 35
27. மாப்பிள்ளைக்கு மிஞ்சி அணிவித்தல் 35
28. பெண்ணுக்கு மிஞ்சி அணிவித்தல் 36
29. நவக்கிரஹங்களும் அதற்குரிய பொருட்களும் 38
30. அரிதேவதைகளும் நவரத்தினங்களும் 39
31. கோத்திரம் சொல்லுதல் 39
32. கோத்திரம் கேட்டல் 40
33. தாலி ஆசீர்வாதம் 43
34. தாலி கட்டுதல் 43
35. மாப்பிள்ளைக்கு உறவினர்கள் அறிமுகம் 48
36. உறவுமுறைகள் விளக்கம் 49
37. சூழ் (அரசு) படைத்தல் 49
38. மறு வீடு அழைப்பு 51
39. (சனி நீர்) சனியாறு விருந்து 52
40. மணமகன் பற்றி..... 53
41. மணமகள் பற்றி..... 54
42. மணமக்களுக்கு..... 57
43. தற்கால திருமணத்தைப் பற்றி சிறிது நேரம் 57

----------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வழிபாடு

1. ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

2. திருவும் கல்வியும் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

3. திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை

4. பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்-கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத்-தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு வழிபாடு

1. காயனை அகாயனாக்கி கண்டனை அகண்டனாக்கி
பேயனைப் பிரம்மமாக்கி பிறப்பு இறப்பிலாமையாக்கி
தாயினும் இனியனாகி தகைந்தெனை அணைத்து ஆண்ட
தூயசற்குருவே நின்னைத் தொழுந்தோறும் களி துவங்குமே.

2. தந்தைதாய் ஆவானும் சார்கதியிங் காவானும்
அந்தமிலா இன்பம் நமக்கு ஆவானஉம் எந்தனுயிர்
தானாகு வானும் சரணா குவானும் அருட்
கோனாகு வானும் குரு.

3. அருந்தொறும் அணைக்கும் அன்னை
அறிவிலாது ஆடி ஓடி
விழுந்தொறும் எடுக்கும் அப்பன்
விளையாடும் போது தோழன்
தொழுந்தொறும் காக்குந் தெய்வம்
சொந்தமாய் எடுப்போர்க் கெல்லாம்
குழந்தை! இப்படி உலாவும் என்
குருநாதன் வாழி வாழி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதத் திருப்பதிகங்கள்

1. மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை இணையடி நீழலே.

2. வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினையேன் நெடுங்காலமே.

3. வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றுப் பதிகங்கள்

1. மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு.
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

2. வேதத்திலுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந்தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத்தகுவது நீறு உண்மையிலுள்ளது நீறு
சீதப்புனல்வயல் சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே.

3. முத்தி தருவது நீறு முனிவரணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பக்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவாலவாயான் திருநீறே.

4. பூச இனியது நீறு புண்ணியமாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக்கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தமதாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவாலவாயான் திருநீறே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமச்சிவாயத் திருப்பதிகங்கள்

1. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

2. கொல்வாரேனும் குணம் பல நன்மைகள்
இல்லாரேனு மியம்புவராயிடின்
எல்லாத் தீங்கையும் நீக்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே.

3. நம்பு வாரவர் நாவில் நவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
சம்பொ னார்தில கம் உல குக்கெல்லாம்
நம்மன் நாமம் நமச்சிவாயவே.

4. நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்து
அக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமியம்மைப் பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்

தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே !
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சபுராணப் பாடல்கள்

*1.* தேவாரம்:-

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடுள்ள நினைவு
ஆயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டா
வேயனதோ ளுமை பங்கன் வெண்காட்டு முக்குள நீர்
தோய்வினையார் அவர் தம்மைத் தோயலாம் தீவினையே.

*2.* திருவாசகம்:-

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே! சிவபெருமானே!
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

*3.* திருவிசைப்பா:-

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்திருவே
ஐயா நீ உலாப்போந்த அன்று முதல் இன்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருட்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. திருப்பல்லாண்டு:-

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு
ஆட்செய்மின்; குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருளளவு இல்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே!

5. பெரியபுராணம்:-

ஆதியாய் நடுவுமாகி
அளவிலா அளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித்
தோன்றிய பொருளுமாகி
பேதியா வேகமாகிப்
பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப்
பொதுநடம் போற்றி! போற்றி!

— — — —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்:-

உம்பர்தரு தேனு மணிக் கசிவாகி
ஒண் கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்ப ரசத்தேன் பருகிப் பலகாலும்
எந்த னுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காக வனத் தணையோனே
தந்தை வலத்தாலருள் கைக்கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்து கரத்தானை முகப் பெருமாளே!

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பில்லா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெறறிவே லாயுதப் பெருமாளே.

ஏறுமயி லேறிவிளையாடு முகமொன்றே
ஈசருடன் ஞான மொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்த்தமுக மொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகமொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருள வேண்டும்
ஆதி யருணாசலம் அமர்ந்த பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூர்வீக வரலாற்றுச் சுருக்கம்

ஆறு நாட்டு வேளாளர் சமூகத்தவர்களாகிய நாம் முற்காலத்தில் (1) திருப்படையூர் நாடு (2) பாச்சூர் குறட்டுப்பத்து நாடு (3) கீழவல்லுவப்ப நாடு (4) மேலவல்லுவப்ப நாடு (5) கரிகாலி நாடு (6) ஆமூர் நாடு என்ற ஆறு நாடுகளில் வாழ்ந்து வந்த படியால் ஆறுநாட்டு வேளாளர் என்ற பெயர் வழங்கலாயிற்று. அத்துடன் பெயருக்குப் பின்னால் கௌரவபட்டம் கவுண்டர் என்றும் வழங்கி வந்தது. அவரவர்கள் இருந்த பகுதிகளை உடையவர் என்பதனால் அக்கோத்திரத்தின் பெயருக்குப் பின்பு உடையான் என்று பொருள்படும்படியாகவும் இவர்களுக்கெல்லாம் தலைமை ஏற்று நடத்தியவர்களைச் சமய மந்திரி என வைத்துக் கொண்டதாகவும் சில வரலாறுகள் கூறுகின்றன. இதிலிருந்து கோத்திரங்கள் வழங்கலாயிற்று.

நன்றி,

சென்னை ஆறு நாட்டு வேளாளர் மலர்
வெளியீடு

## கோத்திரங்களும் விளக்கங்களும்

| | |
|---|---|
| 1. சமயமந்திரி | 2. மிரட்டுடையான் |
| 3. குருவலுடையான் | 4. எதுமலுடையான் |
| 5. சாத்துடையான் | 6. மாத்துடையான் |
| 7. மருதுடையான் | 8. தெவங்குடையான் |
| 9. நல்லுடையான் | 10. தெத்து மங்கலத்துடையான் |
| 11. கொத்துடையான் | 12. களப்பாளன் |
| 13. வலமுடையான் | 14. களத்துடையான் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 15. கூத்துடையான் | 16. கோனுடையான் |
| 17. ஆலத்துடையான் | 18. நாவலுடையான் |
| 19. நத்தமுடையான் | 20. பூண்டிலுடையான் |
| 21. நிம்மலுடையான் | 22. சக்கரவர்த்தி |
| 23. பாவலுடையான் | 24. திருச்சங்குடையான் |
| 25. பனையாண்டான் | 26. கொன்னையுடையான் |
| 27. முருக்கத்துடையான் | 28. சடமங்களத்துடையான் |
| 29. கொன்னக்குடையான் | 30. சிறுதுடையான் |
| 31. வில்வராயன் | 32. காருடையான் |

குறிப்பு: 'வேளாளர் கோத்திரமாலை' ஆறுநாட்டு வேளாளர் கோத்திர விளக்கம்.

முற்காலத்தில் கோத்திரங்கள் முப்பத்தாறுக்கு மேல் இருந்ததாகப் பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். அது தற்போது முப்பத்திரண்டாகக் குறைந்து விட்டது. அதிலும் சில கோத்திரங்களில் இரண்டு மூன்று குடும்பங்களே இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த முப்பத்திரண்டு கோத்திரங்களுக் குள்ளாகவே நமது சமூகத்தவரை அடையாளம் கண்டு பங்காளிகளாகவும், மைத்துனர்களாகவும் தேர்ந்து எடுத்துக்கொள்கிறோம்.

## திருமணத்திற்கு முதற்கடமை

திருமணம் செய்வதற்கு முதற்படியாக ஒரு பெண்ணை ஒரு ஆணுக்கு வாழ்க்கைத் துணைவியாக்க ஏற்பாடுகளைச் செய்தல் இடம்பெறும். எங்கோ இருந்தவர்களை ஒன்று சேர்ப்பதற்கு அடிப்படையாக கோத்திரம், ஜாதகப்பொருத்தம், குடும்ப உறவுமுறை என்பவற்றை இருபகுதியினரும் சிந்தித்து பார்த்து முடிவு செய்தல் வேண்டும். மனச்சம்மதமும் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிச்சயதார்த்தம்

இரு பகுதியினரும் சம்மதம் தெரிவித்த பின்னர் மனம் மாற்றக்கூடாது என்ற சம்பிரதாயத்திற்காக நிச்சயதார்த்தம் செய்து கொள்வது முறையானது.

இரண்டு பகுதியினருக்கும் பொருத்தமான நல்ல நாள் பார்த்து, அந்நாளில் பெண் வீட்டிற்கு மாப்பிள்ளை வீட்டார் வருவார்கள். வரும்போது பெண்ணுக்குத் தட்சனையாக சம்பிராயத்திற்கு பத்தே அரைக்கால் ரூபாயில் ஒரு பகுதி பணமுடிப்பும் அலங்காரப்பொருட்களாக புஷ்பம், கண்ணாடி, சீப்பு, பவுடர், குங்குமம், சந்தனம், பன்னீர், மாலை, சேலை, சட்டை, பாவாடை, என்பனவும் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, மஞ்சள், இனிப்பு, தின்பண்டங்கள் என்பனவும் கொண்டு வருவார்கள்.

மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டுக்கு வந்த முதல் நாள் அங்கிருக்கும் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை மகிழ்ச்சிகரமாக இருக்கவேண்டும் என்பதற்காகவும் காரியங்கள் இனிமையாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் தின்பண்டங்கள் கொண்டுவருவர்.

மாப்பிள்ளை வீட்டார் வந்ததும் வரவேற்று அமரச்செய்து முறையாக பெண்ணுக்கு முன்னுரிமையுடைய மாமன் பெண்ணை அழைத்து வந்து, மாமன் பூசை செய்து தங்கள் குலதெய்வம் இஷ்ட தெய்வம் ஆகியவற்றை நினைத்து பொட்டு வைத்து, மாலை போட்டு ஆசீர்வதிப்பார்கள். அவ்வேளை உனக்குத் திருமணம் பேசி மாப்பிள்ளை வீட்டிற்கு போய் குடும்ப வாழ்க்கை நடத்த காலம் வந்து விட்டது. ஆகவே எனது ஆசியை உனக்கு வழங்கி உனது தாயைப் போல் உனது வாழ்க்கையும் நல்ல முறையில் அமைய வேண்டும் என வாழ்த்தி, இதோ இங்கு அவர்கள் கொண்டு வந்துள்ள உனக்குச் சேரவேண்டிய சேலை, சட்டை, மற்றும் அலங்காரப் பொருட்களையும் தட்சனையையும் வாங்கிக் கொள்ளும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுக்கொள்கிறேன் என்று கூறும் பாவனையில் மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வந்த மங்கலப் பொருட்கள் பணமுடிப்பு என்பன அடங்கிய தட்டை மாப்பிள்ளையின் தகப்பனார் அல்லது அவரின் உத்தரவின் கீழ் சிறியவர்கள் எடுத்துக் கொடுக்க வேண்டும். தாயும் பெண்ணுக்கு உதவியாக வாங்கிசென்று ஆடைகளை அணிவித்து வந்த பிறகே நிச்சயதார்த்தம் செய்யவேண்டும்.

மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வந்த சேலை, சட்டை அலங்காரத்துடன் பெண் வீட்டார் போடும் நகைகளுடனும் பெண் பொன்னாக வந்து நிற்கும் போது இவற்றைப் பார்க்க எல்லாருக்கும் சந்தோஷசமாகவும் மங்களகரமாகவும் இருக்கும்.

மாப்பிள்ளை வீட்டார் ஒரு புதிய குடும்ப தலைவியைத் தம் வீட்டிற்கு எதிர்காலத்தில் அழைத்துச் செல்ல இருப்பதால் பூசை செய்து தங்களுடைய குலதெய்வம் இஷ்ட தெய்வங்களை நினைத்து வணங்கி, தாங்களும் மற்றவர்களும் சுவாமி தரிசனம் செய்து தமது குடும்பத்திற்கு வரவிருக்கும் தலைவிக்கு விபூதி கொடுத்து, சந்தனம், குங்குமம், பொட்டு வைத்து நறுமணம் கலந்த பூமாலையைக் கழுத்தில் அணிவிப்பார். பெண் மாலை போட்டவரையும் மற்றவர்களையும் வணங்கி எல்லோருடைய ஆசியையும் பெற்றி-டுவாள். இப்போது வந்தவர்கள் எல்லோரும் மாலை போட்டு ஆசீர்வாதம் செய்கிறார்கள். பெண்ணுக்கு நடைபெற வேண்டிய ஆலாபனைகள் முடிவுறும்.

அதன் பின் பெண்ணினதும் மாப்பிள்ளையினதும் பெற்றோர்கள் கிழக்கு மேற்காக உட்கார்ந்து, விபூதி தரித்து சந்தனம், குங்குமம் பொட்டு வைத்து உடம்பிலும் சந்தனம் பூசி விடுவார்கள். பின்னர் வெற்றிலை பாக்கு மாற்றிக் கொள்வார். இந்நிகழ்ச்சி எங்கள் பெண்ணை உங்கள் மகனுக்கும், எங்கள் மகனுக்கு உங்கள் பெண்ணையும் மணம் முடித்து கொடுப்பதற்கு இந்த வெற்றிலை பாக்கும் - இங்கு வந்திருப்பவர்களும் சாட்சியாக இருக்கிறார்கள் என்பதைக் கூறும் பாவனையில் அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொட்டு வைக்கும் முறை

பெண்ணின் பெற்றோர் மாப்பிள்ளையின் பெற்றோருக்கு முதலில் பொட்டு வைத்து மாலை போடவேண்டும். காரணம் பெண் வீட்டுக்குத் தான் மாப்பிள்ளை வீட்டார் வெளியிடத்திலிருந்து வந்துள்ளனர். எனவே வந்தவர்களுக்குத்தான் முதலில் மரியாதை செய்வது வழக்கம். இந்த வைபவத்திற்கு பெண் வீட்டிற்கு மாப்பிள்ளை செல்வது வழக்கமல்ல. ஆனால் இப்போது திருமணப்பதிவு முக்கியமானதால் மாப்பிள்ளையும் சில இடங்களில் சமூகமளிக்க வேண்டியுள்ளது.

ஒரு பெண்ணுக்கோ, மாப்பிள்ளைக்கோ மாமன் முறையானவர் பொட்டு வைக்கும்போது, தான் முதலில் பொட்டு வைத்துக் கொண்ட பிறகு, அவர்களுக்குப் பொட்டு வைக்கிறார்கள். அதாவது, தான் கௌரவமாக இருந்து கொண்ட பின்பே, மற்றவர்களுக்கு கௌரவம் கொடுக்க வேண்டும். இந்த விதமாக மச்சான் மோதிரம் போடும் போதும், சகலை பணம் போடும் போதும், அந்த முறையில் விபூதி தரித்து பொட்டு வைத்து, தனக்குத்தானே மாலை போட்டுக் கொள்ள வேண்டும்.

## நெல் அளப்பு நிகழ்ச்சி

திருமணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெறும் வைபவம் இதுவாகும். அன்றைய தினம் திண்ணை போடுதல் என்பதும் நடைபெறும். மேலும் அன்று மாமன்மார்கள் புது வஸ்திரம் கொடுத்து விருந்து அளித்து உபசரித்தலும், மறுநாள் பெண் அழைத்துப் போதலும், அழைக்க வருபவர்களுக்கு விருந்து அளித்து பெண்ணை அனுப்புதலும் வழக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் முற்காலத்தில் திருமணம் நடக்கும் இடத்தில் புது மண்ணினால் புதியதாய் தரையை அமைத்து அதற்கு நான்கு வாசற்படிகளும் நான்கு மூலைகளும் வைத்து எட்டுத்திக்கு பாலகர்கள் காவல் செய்ய மாங்கல்யம் பூட்டப்பட வேண்டும் என்பது மரபாகும். இப்போது இவை மாறுதல் அடைந்து விட்டன. காரணம் இக்காலத்தில் அநேகமாக எல்லாத் திருமணங்களும் கோவில்களிலும் வசதி உள்ள மண்டபங்களிலும் நடைபெறுகின்றன. கல்யாணம் சடங்குகள் பல, சுருக்கமாக ஒரே நாளில் செய்யப்படுவதும் காரணமாகும்.

பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் நெல் அளப்புக்கு முன்னதாக விருந்து அளிக்கிறார்கள். இவையெல்லாம் நேரகால வசதியைப் பொறுத்ததாகும்.

நெல் அளப்பில் விளக்கேற்றி பாய் மடித்து, வெள்ளைத்துணி விரித்து மாப்பிள்ளைக் கோலத்துடன் நிற்க, மஞ்சள் துணியில் விராட்டி, பச்சைநெல், சில்லரைப்பணமும் சேர்த்து குலதெய்வத்தை நினைத்து முடிப்பு முடிய வேண்டும். இந்த முடிப்புத்தான் குலத்தெய்வத்தைக் காணச் செல்லும்போது காணிக்கையாகச் செலுத்தப்படுவதும் வழக்கம். நெல்லை ஒரு பானையின் அளவுக்கு நிறையாக எடுத்திருக்க வேண்டும். பானை நிறைவுக்கு நெல் குறையக்கூடாது; எதுவும் குறைவின்றி நிறைவாக இருக்க வேண்டும் என்ற திருப்திக்காகவே இந்த சம்பிரதாயம். இந்த நிறைபானை நெல்லை நிலத்தில் கொட்டியிருக்க பானைக்கு விபூதி, சந்தனம், குங்குமம் இட்டு மஞ்சள் முடிந்த நூல் கட்ட வேண்டும். இது நெற்பானைக்குக் காப்பு ஆகும். இந்த இடத்தை நறுமணம் கலந்த மங்கள இடமாக்கி தேங்காய் உடைத்து பூசை செய்து தாய்மாமன் பொட்டு வைத்து மாலையிட்ட பின் தகப்பனார் சுற்றத்தார்கள் மாலையிடுவார்கள். பழங்காலத்தில் சபையோர் மாலையிடுவதில்லை.

ஆண்கள் மாலையிட்டவுடன் மாப்பிள்ளையின் தாய் மாலையிட்டு பின் நிலத்தில் கொட்டப்பட்டிருக்கும் நெல்லை படியால் அளந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானையில் போட்டு பின் அடுத்தபடி அளந்து நிறை செய்து வைத்துவிட வேண்டும். இப்படி ஒவ்வொரு பெண்ணும் அளந்து பானையை நிரப்புவார்கள். நெல் போதாவிட்டால் மீண்டும் பானை நெல்லை நிலத்தில் இட்டு அளப்பார்கள். நெல் அளப்பு முடிந்ததும் மாப்பிள்ளை வீட்டார்களில் பங்காளிக்கு வாழ்க்கைப்பட்ட சுமங்கலிப்பெண்கள் மூன்று பேர் நெற்பானையை எடுத்துச் சென்று அடுப்பில் வைத்து தண்ணீர் ஊற்றி வேக வைப்பார்கள். இந்த நெல்லின் அரிசியைதான் சாந்தி முகூர்த்தம் என்ற நாளன்று பெண் முதல் முறையாக சமைத்து பரிமாறுவாள். நெல் அளந்த பெண்கள் சுமங்கலிகளாதலால் அவர்களுக்கு வெற்றிலை, பாக்கு, மஞ்சள் நூல் என்பன கொடுத்து மரியாதை செய்வார்கள். தற்காலத்தில் நெல் அளப்பது எதற்காக என்பது தெரியாமல் அரிசியை அளக்கிறார்கள். நெல் அரிசியை எவ்வளவு கெட்டியாக மூடிக்கொண்டுள்ளது. அதனை சமைத்துச் சாப்பிட எவ்வளவு கஷ்டம். இவை வாழ்க்கையில் இருக்கும் கஷ்டத்தை உணர்த்தி வைக்கும் ஒரு செயலாகும். இதே முறையாகவே பெண் வீட்டிலும் நடக்கும்.

## தாய் மாமன் நடத்தி வைக்கும் திருவாதிரை கல்யாணம்

திருவாதிரை என்பது ஒரு பெண்ணுக்கு அல்லது ஆணுக்கு அவர்களது தாயினது தாய் தகப்பனால் தங்களது மகள் வீட்டில் நடைபெறும் முதல் கல்யாணத்திற்குக் கொடுக்கும் சீர் வரிசையாகும். கொடுப்பது தாயினது தாய், தகப்பன் ஆனாலும் சொல்வது மாமன்சீர் வரிசை என்றுதான்.

அம்மாயி தாத்தாவின் சீர்வரிசை என்று சொன்னால் சிலருக்கு கல்யாணம் நடைபெறும்போது தெய்வாதீனமாக அம்மாயி தாத்தா இருக்க முடியாமல் போய்விடக்கூடும். அப்படியான சந்தர்ப்பத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் தங்கள் சகோதரியின் பிள்ளைக்கு மாமன் சீர் கொடுக்கும் வழக்கம் இல்லை எனக் கூறி தப்பிவிடலாம். அதனால்தான் மாமன் சீர்வரிசையென வழங்கலாயினர். இவை தொன்றுதொட்டு வழக்கத்தில் உள்ளவை.

மாமன் சீர் கொடுப்பதாயினும் அவரவர் சக்திக்குத் தக்க அளவு கொடுப்பார்கள். சொல்லப் போனால் பெண் வீட்டில் நடைபெறும் முதல் கல்யாணம் ஒரு சிறிய கல்யாணம். அது செல்லக் கல்யாணம் எனலாம்.

திருமணத்தன்று அல்லது முதல் நாளன்று பெண்ணை அழைத்துச் செல்ல மாப்பிள்ளை வீட்டார் வருவார்கள். அதற்கு முன்பு மாமன்மார்களுடைய சீர்வரிசைகள் பெண் வீட்டிற்குக் கொண்டு வந்திருப்பார்கள். பெண்ணை அழைத்துச் செல்லுமுன்பு சீர்வரிசை-களை முன் எடுத்து வைத்து வீட்டுக்குள் அல்லது தனியிடத்தில் பெண்ணை நிறுத்தி பூசை செய்து, அம்மாயி தாத்தா அல்லது மாமன் மனைவி, பெற்றோர்கள் மாலை அணிவித்து வாழ்த்திய பின் திருவாதிரை மணவறைக்குப் பெண்ணை அழைத்துச் செல்வார் பெண்ணின் தோழி.

மணவறையில் பெண்ணுக்கோ மாப்பிள்ளைக்கோ பொட்டு வைத்தல், மாலை போடுதல், அலங்காரம் செய்தல் கூடாது. உதாரணமாக, சுவாமிக்கு திரையில்லாமல் அலங்காரம், சாத்துப்படி செய்யக்கூடாதல்லவா? திருவாதிரையில் மாமன் மனைவியும் மாமன்-பங்காளிகளும் இருப்பார்கள். மாமனும் அரசு படைப்பவரும் நாணயம், பால் என்பன ஊற்றி அரசங்கிளையை நடுவார்கள். சந்தனம், குங்குமம் இட்டு சிவப்புத் துணி கட்டுவார்கள். திருவாதிரை கல்யாணம் ஒருவருக்குத்தான். அதனால் அரசு மட்டும் ஊன்றுவார்கள். மாமன் பங்காளியைச் சேர்ந்த மூன்று பேரில் ஒருவர் பொங்கல்பானையில் பொங்கலை எடுத்து அவருக்கு இடது புறமாக இருப்பவரிடம் கொடுக்க, அரசு படைப்பவர் அதை வாங்கி இலையில் போடுவார். பொங்கல் எடுத்தவருக்கு வலதுபுறமாக இருப்பவர் அரசு படைப்பவரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் தட்டை வாங்கி மீண்டும் பொங்கல் எடுக்கக் கொடுக்க வேண்டும். இவ்வாறு திருவாதிரை மூன்று இலையில் படையல் இட்டு, அரசுக்கு பூசை செய்து அரசாணி பானைக்கு சோறும் உப்பும் கலந்து நீர் ஊற்ற வேண்டும். பானையின் அடிப்பக்கத்தில் முளைப்பாரி வைத்திருக்க வேண்டும்.

பெண்ணின் தாய் தனது மகள் குடும்பத் தலைவியாகப் போவதையும் தனது உடன்பிறப்புகள் கொடுத்துள்ள சீர்வரிசைகள் எல்லாவற்றையும் மனதால் ரசித்து சந்தோஷப்பட்டு தனது மகள் சீரும் சிறப்புமாக மங்களகரமாக இருப்பதையும் நினைத்து பூரிப்படைவாள். எல்லா சீர்வரிசைகளையும் செய்த மாமனின் மனைவி முதலில் அடை சுற்றி வர, தொடர்ந்து மற்றப் பெண்களும் அடை சுற்றுவார்கள். மாமனுடைய தாய் சுமங்கலியாக இருந்தால் மாமன் மனைவி கைக்கு நீர்விடமாட்டார். தாய், திருமணத்தன்று முதலாவதாக அடை சுற்றி கைக்கு நீர்விடுவார். இரண்டு நிகழ்ச்சிகளிலும் தாய் பங்கெடுத்து இரண்டு தடவை அரசு சுற்றுவது முறையல்ல. வருஷம் திரும்பாமல் இரண்டாவது தடவை அரசு சுற்றுதல் முறையல்ல என்பார்கள். இதன் காரணமாகத்தான் தனது பிள்ளைக்கு கல்யாணநாள் நெருங்கி விட்டால் வேறு ஒருவரது கல்யாணத்திற்கும் கோத்திரம் சொல்லி கொள்ள மாட்டார்கள். தங்களது கிரகதோஷம் சரியில்லாவிடில் கூடாதவற்றைச் செய்து கஷ்டத்தில் மூழ்குவார்கள். இப்படியிருக்கையில் ஒரே நாளில் இரண்டு முறை அரசு சுற்றுவது எப்படி......?

திருவாதிரை மணவறையில் இருக்கும் பாய் அரசானிப்பானை, முளைப்பாரி அத்தனையும் மாமன்மார் கொண்டு வந்தவைகளே. எனவே கைக்கு நீர் ஊற்றும் உரிமையும் அவர்களுக்குத்தான். திருவாதிரை என்ற வைபவத்தில் மாமன் பங்காளிகளுக்கு அதிகம் பங்கு உண்டு. மற்றும் பெண்ணின் தாய் எந்தப் பங்காளிகளின் மரபில் வந்தவர் என்பதையும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.மாமன் மனைவி அல்லது மாமனின் தாயார் கைக்கு நீர் ஊற்றி மூன்றுமுறை வலம் வந்தபின் வெளியில் சென்று பெண்ணின் வாயில் நீர் கொப்பளித்து மாமனின் கால்களில் நீராலும் அதேபோல் பாலினாலும் பாத அபிஷேகம் செய்வார்கள். இது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமன் இடத்தில் உள்ள பரச உரிமை. பின் விராட்டி, வெற்றிலை, நெல் என்பனவற்றை சுளகில் இட்டு பெண்ணுக்குத் திருஷ்டி கழிப்பார்கள். பின்னர் மணவறைக்கு வந்து அரசுக்கும் முளைப்பாரிக்கும் தண்ணீர் ஊற்றுவார்கள். இவை திருமணத்திலும் நடைபெறும் ஒரு சடங்காகும். இவை பற்றி சில விளக்கங்களை பிறகு ஆராய்வோம்.

அரசுக்கு தண்ணீர் ஊற்றியபின் மணவறையில் பெண்ணை உட்காரவைத்து மாமனின் சுமங்கலித் தாய் அல்லது மனைவியால் திருவாதிரைப் பட்டம் கட்ட வேண்டும். கல்யாணத்தன்று எல்லாச் சடங்குகளும் முடிந்து தாலி கட்டிய பின்பு மாமியார் பட்டம் கட்டுவாள். அது போல் இதுவும் இறுதியில் கட்டப்படுவதாகும். இதுவரையில் பெண்ணுக்குப் பயிற்சி முடிந்து பட்டம் கட்டப்பட்டது. (ராஜாவிற்கும் பட்டம் கட்டுவதானாலும் முடிசூட்டுவதானாலும் எல்லா நிகழ்ச்சிகளும் முடிந்த பின்னர்தான் பட்டம் கட்டுவது வழக்கம்) தாய் வீட்டில் செல்லப் பிள்ளையாக இருந்த பெண் இன்னொரு வீட்டிற்குத் தலைவியாகப் போவதற்கு இது முதற்படியாகும். இத்திருவாதிரை நிகழ்ச்சியானது பெண் அழைக்க வந்த பின் செய்வதாகும். காரணம், நூறில் ஒன்று அல்லது ஆயிரத்தில் ஒரு திருமணம் பொருந்தாமல் மாப்பிள்ளை வீட்டார் வராமலும் இருக்கலாம். திருவாதிரை முதலில் இடம் பெற்றால் பின்பு பெண்ணை வீட்டில் வைத்திருக்க முடியாது. எனவே பெண் அழைக்க வந்த பின்பு தான் திருவாதிரை நடைபெறும். இந்தநேரம் பெண்வீட்டார், தம் உறவினர்களுக்கு ஐவுளிகள் வழங்கிடுவார்கள்.

## பெண் அழைப்பு

இதுவரை நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து பெண் அழைக்க வந்திருக்கும் மாப்பிள்ளை வீட்டாரில் மாப்பிள்ளையின் சகோதரர் பூசை செய்து விபூதி கொடுத்து சந்தனம், குங்குமம் பொட்டு வைத்து மாலை அணிவிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் மணப்பெண்ணானவள் தனது தாய் தந்தையரை கிழக்கு முகமாக நிறுத்தி பாத நமஸ்காரம் செய்து உடன் இருக்கும் சுற்றத்தார்களுக்கும் நமஸ்காரம் செய்து மாப்பிள்ளை வீட்டாருடன் புறப்படுவாள். போகும்போது நிறைசெம்பும், தேங்காயும், சங்கும் கொடுத்து அனுப்புவார்கள். சங்கும், தேங்காயும் 'வெள்ளை உள்ளமும் முக்கண்ணும் உள்ள இறைவன் துணையுடன் போ மகளே' என்று கூறும் பாவனையில் சுட்டாலும் வெண்மை தரக்கூடியதுமான கடல் சங்கையும் மூன்று கண்கள் உடையதுமான தேங்காயையும் கொடுத்து அனுப்புவார்கள். இனி இந்த மகள் நம் வீட்டுக்கு குடியிருக்க வரக்கூடாது என்பதனால்தான், இறைவனின் துணையுடன் போ மகளே, நாங்கள் பின்பு வருகிறோம் என்பார்கள். வளர்த்த பாசத்தை விட்டுப் போ என்று சொல்வதாலும், வளர்ந்த பாசத்தை விட்டுப் போக வேண்டும் என்பதாலும், பெற்றோரும் பெண்ணும் கண் கலங்குகிறார்கள். இது இறைவனால் அளிக்கப்பட்ட பாச உணர்வாகும். அடுத்து, எத்தனை தடவை போகும்போதும் 'போய் வா மகளே' என்பார்கள்.

மாப்பிள்ளை வீட்டுக்கு முதலாவதாகச் செல்லும் பெண் கோயிலுக்குச் சென்று விநாயகருக்கு வழிபாடு செய்து புதுமனை புகும் வீட்டில் எந்த விக்கினங்களும் வரக்கூடாது என்று வேண்டிக் கொண்டு செல்ல வேண்டும். மாப்பிள்ளை வீட்டிற்குப் பெண் முதன் முதலாக வருவதால் ஆரத்தி எடுத்து திருஷ்டி கழித்து வரவேற்க வேண்டும். முற்காலத்தில் நலுங்குப்பாடல் பாடி வரவேற்பர். இன்னும் கிராமங்களில் நலுங்குபாடி வரவேற்கிறார்கள்.

## திருமணத்திற்கு முன் சில விளக்கங்கள்

முற்காலத்தில் நமது சமூகத்தவர்கள் கிராமங்களில் வேளாண்மை என்னும் விவசாயத்தில் நாட்டம் கொண்டிருந்ததால் இரவு நேரங்களில் கல்யாணம் செய்வார்கள். இரவு நேரங்களில் நட்சத்திரம் திதி பலாபலன்களும் பார்ப்பதில்லை. ஒரு ஐயர் ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தில் நான்கு ஐந்து கல்யாணங்களுக்குத் திகதி குறித்துக் கொடுப்பார். அந்த ஊருக்கு அவர்தான் புரோகிதராக இருப்பார். குறித்த திகதியன்றிரவு சாப்பாட்டின் பின்னர் முதலில் ஒரு திருமண வீட்டில் முகூர்த்தக்கால் ஊன்றி அதை சுற்றி ஏனைய வேலைகளை மேற்கொள்ளும்படி கூறிச் செல்வார். அடுத்து இரண்டாவது மூன்றாவது திருமண வீடுகளுக்கும் சென்று முகூர்த்தக்கால் ஊன்றிப் பின்பு மறுமடியும் முதலாவது வீட்டுக்கு வந்து 'கங்கணம்' என்ற காப்பு கட்டி மாப்பிள்ளையை கோவிலுக்கு போய் வரும்படி கூறிவிட்டு இரண்டாவது மூன்றாவது திருமண வீடுகளில் கங்கணம் கட்டி வருவார். பின் முறையே ஒவ்வொரு திருமண வீட்டிலும் தாலிகட்டும் நிகழ்ச்சியை ஹோமம் வளர்த்து நிறைவேற்றுவார். எனவே அவசரப்படாது தத்தம் வேலைகளை ஒவ்வொருவரும் மேற்கொள்வதற்குப் போதிய நேரம் கிடைக்கின்றது. இறுதியாக ஐயர் முறையே ஒவ்வொரு திருமண வீட்டிலும் தட்சனையைப் பெற்றுச் செல்வார். இப்போது நமது சமூகத்தினர் பலரும் பல துறைகளில் தொழில் செய்து முன்னேற்றம் அடைந்துள்ளார்கள். ஆகவே நம் வசதிக்காக பகல் நேரத்தில் முகூர்த்தம் வைக்கிறோம். முன்பு விருந்து கொடுத்து திருமணம் செய்தோம். இப்போது திருமணம் செய்தபின் விருந்து கொடுக்கின்றோம். இதில் எது சரியானது என்பது பிரச்சனைக்குரியது. கோழி முந்தியதா? முட்டை முந்தியதா? என்பது போலவே இதுவும். திருமணத்திற்குப் பின்பு விருந்து விருந்திற்குப் பின் திருமணம் என்ற இரண்டிற்கும் வாதப் பிரதிவாதம் செய்தால் இருசாரார் சொல்வதும் சரிதான்.

திருமணத்திற்குப்பின் விருந்து என்பது திருமணத்தைக் கண்டு களித்து மணமக்களை வாழ்த்தி முடித்தவுடன் அவர்களை உபசரித்து, கல்யாணத்திற்குச் சமூகமளித்து வாழ்த்தியதற்கு நன்றி என்ற தோரணையில் உணவு கொடுத்து மகிழ்ச்சியோடு சென்று வாருங்கள் என்பதாகும்.

விருந்துக்குப் பின் திருமணம் - என்றால் ஒருவர் அல்லது வந்துள்ளவர்கள் அறுசுவையுடன் உண்டுகளித்து மனநிறைவோடு மணமக்களை வாழ்த்துவார்கள் என்றும் கூறுவர். எனவே அவரவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிக்கு ஏற்றதாக விருந்து அளித்தல் ஆகும். நமது சமூகத்தில் திருமண முகூர்த்த நேரம் ஆரம்பம் முதல் முடிவு வரை ஏழு முதல் பத்து நாழிகை நேரம் ஆகும். (சுமார் மூன்று நான்கு மணித்தியாலம்). நமது சமூகம் மட்டும் அல்ல. நம் மதத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோருக்கும் இது பொருந்தும். நமது சமூகத்தில் தாலி கட்டியவுடன் பெரும்பாலான சடங்குகள் முடிந்து விடுகிறது. பிற சமூகங்களில் கல்யாணத்திற்குப் பிறகும் நிறையச் சடங்குகள் செய்கிறார்கள்.

திருமணச் சடங்கு என்பது படித்துப் பார்த்துச் செய்ய முடியாதது. எனவே சடங்கு முறைகளை ஓரளவுக்கு நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

மாமனின் கால்களில் பாதஅபிஷேகம் செய்தபிறகு, சுளகில் வெற்றிலை, விராட்டியுடன் அஷ்டதிக்கு தேவர்களை வணங்குவது, சகல ஐஸ்வர்யங்களையும் தரவேண்டும் என்று நினைத்து சூரிய நமஸ்காரம் செய்வதற்கு ஒப்பாகும்.

அதேபோல குடவிளக்கும் அக்னிதேவனுக்கு ஒப்பிடப்பட்டு, இறுதிவரை இருள் நீங்கி இருக்க வேண்டுமென்பதற்காக வைக்கப்படுகின்றது.

அரசாணிப்பானையானது, சப்தசாகரங்களும் (எழுகடலும்) அடங்கியது. அதனால் அதில் ஏழு செம்பு நீரிட்டு அதிலுள்ள ஜீவராசிக்கு உணவு படைக்குமுகமாக உப்பும், பொங்கலும் இடப்படுகின்றது. அடுத்து வரும் பானைகளில் ஐந்து நதிகளை (கங்கை, யமுனை, சிந்து, காவேரி, கோதாவரி) எனநினைவு கூறுமுகமாக ஐந்து செம்பு தண்ணீர் ஊற்றப்படுகின்றது.

முகூர்த்தக்கால் நடும் பெண்கள் மூவரும் இலட்சுமி, சரஸ்வதி, ஈஸ்வரி ஆகியோருக்கு ஒப்பவானவர்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது செயற்பாடுகளில் சாணம் முக்கிய பங்கு வகிக்கிறது. கிருமிகளை அழிக்கும் வல்லமையுடையது. பிள்ளையாரை உருவாக்குவதற்கு மஞ்சளைப் போன்று சாணத்தையும் உபயோகிப்பார்கள். அதனால்தான் சாண விராட்டியைக் கொண்டு திருஷ்டி கழிக்கிறார்கள்.

மணவறையில் உபயோகித்த பொங்கல், தேங்காய் மூடி, பழம், அரிசி ஆகியவற்றை குடும்பத் தொழிலாளி எடுத்துச் செல்வார்.

சாந்தி முகூர்த்தம் காதலில் துடித்துக் கொண்டிருந்த உள்ளம் ஆசைகளை அடக்கிக் கொண்டிருந்த உடம்பு, அன்றைய தினம் சாந்தி அடைகிறது என்பதாகும்.

பெண்கள் குனிந்து நடப்பது பூமியிலும் வாழ்க்கையிலும் வழுக்கி விழாமல் இருப்பதற்காகத்தான்.

அக்கினி வளர்ப்பது எதிர்கால ஒழுக்கத்திற்கு அக்கினி சாட்சியாகிறது. அவர்கள் வழிதவறினால் அவர்கள் உள்ளத்தை எரித்து தண்டிக்கிறான்.

திருவாதிரையில் பெண்ணுக்கு அல்லது ஆணுக்கு மட்டும் நடைபெறுவது செல்லக் கல்யாணமாகும். அதனால் மாமனும் மனைவியும் அல்லது அம்மாயி தாத்தாவும் அரசு படைப்பவரும் சேர்ந்து அரசங்கிளையை மட்டும் ஊன்றுவார்கள். திருமணத்தில் பெண்ணாகவும் மாப்பிள்ளையாகவும் அரசங்கிளையையும் மூங்கிலையும் கருதி, பெண்கள் மூவரும் மாப்பிள்ளையும் சேர்ந்து நான்கு பேர் ஊன்றுவார்கள்.

அட்சதை ஆசிர்வாத அரிசியில் திருமணத்தில் மஞ்சள் கலக்கக்கூடாது. அமங்கல நிகழ்ச்சயில்தான் மஞ்சள் கலப்பது வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது வலிமையின் மீது நம்பிக்கை வைத்து வாழ்வதற்கு வலது காலை முதலில் எடுத்து வைக்க வேண்டும். வலது பக்கமாகச் செல்ல வேண்டும். மனிதனின் கை, கால்களில் வலது கையும் காலும் பலமுள்ளவை. மணவறைக்கு வருவதும், சுற்றி வருவதும், ஊர்வலம் வருவதும் வலப்பக்கம் வருவதே முறையானதாகும். பூமியும் வலப்பக்கம் சுற்றுகிறது. அதை அடிப்படையாக வைத்தே வலது பக்கம் முக்கியமாகிறது.

ஒரு தாய் சுமங்கலியாக இருந்து தந்தை கல்யாணத்தில் கலந்து கொள்ள முடியாவிடில் தாயானவள் அடை சுற்றி கைக்கு நீர் வார்க்கலாம். தந்தையின் பங்காளிகளில் ஒருவர் கோத்திரம் சொல்லிக் கொள்ளலாம். 1947இல் எனது உறவினரது மகளுடைய திருமணத்தில் நடந்தது. அப்போது தந்தை இலங்கையில் இருந்தார்.

மனை கட்டுவதற்கும், கோயிலில் சிலை வைப்பதற்கும் அடியில் தங்கம் வெள்ளி நவரத்தினங்கள் போடுவது போலவே முகூர்த்தக்கால் நடும்போதும் நாணயங்களும் நவரத்தினங்களும் போடப்படுவது வழக்கம்.

நமது சமூகத்தில் மட்டுமே மூங்கிலை ஆணாகவும் அரசங்கிளையை பெண்ணாகவும் மதித்து பொங்கல் வைத்து படைக்கிறார்கள்.

## கடைசிக்கு முதல் விளக்கம்

தாலி கட்டுவது என்ற சொல் முற்காலத்தில் இருந்து இன்று வரை மாறாத சொல்லாகும். உண்மையில் சற்று சிந்தித்தால் இப்போது யாரும் தாலி கட்டுவதில்லை. தாலியைக் கழுத்தில் போடுகிறார்கள். நமது முன் சந்ததியினர் தாலியைக் கயிற்றில் கோர்த்து தாலிக் கயிற்றைக் கழுத்தில் கட்டினார்கள். அதற்கு உதவியாக பிடரியின் அருகில் விளக்கு வைத்து அவ்வெளிச்சத்தில் மூன்று முடிச்சுப் போடுவார்கள். ஒரு முடிச்சு - கணவனுக்கு அடங்கியவள் என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது முடிச்சு _. தாய் தந்தையர்க்கு கட்டுப்பட்டவள் என்றும், மூன்றாவது முடிச்சு _ தெய்வத்துக்கு பயந்தவள் என்றும் உறுதி கொள்ள வைப்பதாகும். இரவிலோ, பகலிலோ முடிச்சுப் போடுவது சரியாக இருக்க வேண்டும் என்பதற்காக மாப்பிள்ளையின் சகோதரி விளக்கேற்றி வைத்திருப்பார். இத்தாலிக்கயிறு நூலால் ஆக்கப்பட்டு படிப்படியாக, பெண்ணின் வருங்கால வாழ்க்கைப் பாதுகாப்பிற்காக சிறிது தங்கம் சேர்த்துத் தங்கக்கம்பி ஆக்கப்பட்டது. பின் சிறிய தங்கக்கம்பி கொடியாக சிறியதும் பெரியதுமாயிற்று. இம் முன்னேற்றம் மகிழ்ச்சிக்குரியது. இதில் வித்தியாசம் என்னவெனில் முன்பு தாலியைக் கட்டினார்கள். இப்போது தாலியைப் போடுகிறார்கள். செய்முறைப் பெயர் மட்டும் மாறவில்லை. விளக்கேற்றும் பழக்கமும் மாறவில்லை.

இன்னும் மாப்பிள்ளையானவர் அவசியம் தொப்பி அல்லது தலைப்பாகை, கிரீடம் வைக்க வேண்டும். இது புதிய விஷயமல்ல. முற்காலத்தில் இருந்து வந்த மரபு. இலங்கையிலும் நமது சமூகத்தவர் செறிந்து வாழும் மத்திய மாகாணத்தின் மேற்பகுதியான அட்டன், டிக்கோயா, மஸ்கெலியா போன்ற பகுதிகளில் நமது சமூகத்தினர் மாப்பிள்ளைத் தொப்பி (தலைப்பாகை) வாடகைக்கு கொடுத்து வாங்கியது நினைவிருக்கலாம். இது ஏன் வைக்க வேண்டும் என்பதற்கு ஓர் உதாரணம் -1971ல் ஒரு கல்யாணம் நடைபெற்றது. கல்யாணம் நடப்பதற்கு முன்பு மாப்பிள்ளைக்கு மாலை போட்டு வாழ்த்தி மணவறைக்கு அனுப்புவார்கள். அவ்வேளை மாப்பிள்ளைத் தோழன், வரிசையாக வந்தவர்களில் ஒருவருக்கு, மாப்பிள்ளையிடம் கழற்றிய மாற்று மாலையைக் கையில் கொடுத்தார். மாலையை வாங்கியவர் பின்னால் நிற்பவருடன் பேசிக் கொண்டே மாலையை வாங்கினார். கொடுத்தவர் யாரென்று பார்க்கவில்லை. மாலையை மாப்பிள்ளையின் கழுத்தில் அணியாமல் தோழனின் கழுத்தில் அணிவித்தார். மற்றவர்கள் மாப்பிள்ளைக்கு போடுங்கள் என்று சொல்ல, தோழனும் தனது கழுத்தில் விழுவதைத் தடுத்து மீண்டும் அவரிடம் கொடுக்க அவர் மாப்பிள்ளைக்கு மாலையை அணிவித்தார். இது மாப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாட்டமாகும். எனவே மாப்பிள்ளை தொப்பி அல்லது தலைப்பாகை அணிந்திருந்தால் இந்த மாறாட்டம் நிகழ்ந்திருக்காது.

இது தவிர மாப்பிள்ளையானவர் குழந்தையாக, பையனாக, வாலிபனாக வளர்ந்து தனது தாய் தந்தையர்களது குடும்பப் பொறுப்பையும் தனது வாழ்க்கைக்குத் துணையாக வரும் மங்கையை பொறுப்புடன் ஏற்றுக் கொள்ளவும் தனக்கு தலைக்கு மேல் பொறுப்பு இருக்கிறது என்பதை உணர்த்துமுகமாகவும் தலைப்பாகை, தொப்பி அணிவது முக்கியமானதும் அவசியமானதுமாகும். இது நம் சமூகத்தில் மட்டுமின்றி வேறு இனங்களில் பெரும் கல்விமான்களாக இருப்பவர்கள் உட்பட தங்களது மரபு வழியை விடாமல் செய்கிறார்கள். சில இடங்களில் பணம் கொடுத்துத் தலைப்பாகை கட்டுவித்துக் கொள்கிறார்கள். இப்போதும் இதைக் காணலாம். ராஜாவுக்குப் பட்டம் கட்டுவதானால் கிரீடம் எந்த நேரமும் பாவிக்காவிட்டாலும் வைபவங்களில் கிரீடம் வைக்கத்தானே வேண்டும். மாப்பிள்ளைக்கு கழுத்தில் மாலையைப் போட்டவுடன் மாப்பிள்ளை என்று சொல்ல முடியுமா? இந்தியாவில் மாப்பிள்ளை தோழனும் கழுத்தில் பூமாலை அல்லது பூச்சரம் போட்டுக் கொள்கிறார். *1986*ல் சேலத்திலும் *1990*ம் ஆண்டு திருச்சியிலும் நடந்த பிரபல்யமான நமது சமூகத்தினரின் கல்யாணங்களில் மாப்பிள்ளை தலைப்பாகை அணிந்திருந்தார்கள். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மணவறையில் இருக்க வேண்டிய பொருட்கள்

முதலில் மணவறைக்குரிய பொருட்களை குறிப்பிடுவோம். விபூதி, சந்தனம், குங்குமம், சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, தூபக்கால், புஷ்பம், தாம்பாளம் (இரண்டு அல்லது மூன்று), அம்மி, சமைத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதமும் குழம்பும், உப்பு, கால் மூடியுடன் அரசாணி பானை, கடல்சங்கு, ஐந்து முளைப்பாரி, குத்துவிளக்கு, குடவிளக்கு, அதனை வைக்க உரல், விளக்குத்தாச்சி, முகூர்த்தக்கால் (மூங்கிலும் அரசங்கிளையும்), லஷ்மி விளக்கு, திரி, எண்ணெய், பால், மஞ்சள், மஞ்சள் தூல், நூல்கண்டு, தயிர், கோமயம், முக்காலி, படி, நெல், சமித்து குச்சிகள், பாய், மாற்றுவேஷ்டி, நுனிவாழையிலை, நிறைசெம்பு, ஆரத்தி தாம்பாளம், தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, நெய், வெல்லம், விராட்டி, அரசுக்குக் கட்டுவதற்குத் துவாய் (டவல்), சிவப்பு துணி (1/2 மீ. அளவு), மண்ணுடன் வாளி, கத்தி, கை அலம்ப பாத்திரம், பொங்கல்பானை மூடி, கரண்டி, அடை, பச்சையரிசி, நவதானியம், நவரத்தினங்கள், குவளை, ஐயருக்குத் தேவையான தர்ப்பை, மாவிலை, ஆசனப்பலகை ஆகியன.

மணவறையில் முறைப்படி சிலவற்றைக் குறிப்பிட்ட இடங்களில்தான் வைப்பார்கள். வலது பக்கம் குடவிளக்கு, அடுத்து இடப்பக்கமாகக் குத்துவிளக்கு, அரசாணிக்கால், அதன் அடியில் முளைப்பாரி என்பனவும் இருக்க வேண்டும். இடது பக்கம் அம்மி, வலப்பக்கமாக கால் மூடியுடன் சேர்ந்த அரசாணிபானை, அம்மியில் சாதமும் குழம்பும் கைவிளக்கும், பக்கத்தில் இலையில் உப்பு என்பன வைக்கவேண்டும். மற்றவைகளுக்கு ஒதுக்கப்பட்ட இடமென இல்லை. எல்லாம் கிரமமாக வைத்து குடவிளக்கை ஏற்றிக் கொள்ள வேண்டும்.

## புண்ணியவாசம்

மணவறையானது தேவலோக இந்திரன் சபைக்கு சமமானது. ஐயர் முதலில் சுற்றம் சூழலை புண்ணியவாசம் செய்து கும்பம் வைத்து விநாயகர் வழிபாடு செய்வார். அதோடு ஐயருக்குரிய வஸ்திரதானம் முதலில் வழங்கிய பின்பு மாப்பிள்ளைத் தோழனுக்கும் மாப்பிள்ளைக்கும் ஆசீர்வாதம் செய்து வஸ்திரம் வழங்குவார். புதிய வஸ்திரத்தை அணிந்து கொண்டு வந்து முகூர்த்தக்கால் நடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஐயரும் புதிய வஸ்திரம் அணிந்து தான் திருமணம் செய்து வைப்பார். தட்சணையும் உணவுப் பொருட்களும் இறுதியில் பெற்றுக் கொள்வார். நாமும் திருமணங்களில் இடம்பெறும் சடங்கு முறைகள் எதற்கு என்பதை ஓரளவிற்காவது தெரிந்து வைத்திருப்பது அவசியமாகும்.

## முகூர்த்தக்கால் நடல்

முகூர்த்தக்கால் நடுவதற்காக மாப்பிள்ளையின் பங்காளிகளுக்கு வாழ்க்கைப்பட்ட பெண்கள் மூவர் மாப்பிள்ளையுடன் சேர்ந்து நான்குபேராக முகூர்த்தக்காலுக்கு அபிஷேகம் செய்து பால், தயிர், ஊற்றி சந்தனம், குங்குமம் கீழிருந்து மேல் நோக்கிப் பூசி நவரத்தினங்களை அடியில் போட்டு, கெட்டி மேளத்துடன் மண்ணில் அல்லது மண் உள்ள வாளியில் நடவேண்டும். இவற்றுக்கு ஐயர் உதவியாக இருப்பார்.

திருமணத்தில் அரசாணிக்கால் முக்கியமானதும், ஆரம்பமும் ஆகும். இந்த நிகழ்ச்சியில் அபசகுனமாக கூடாத வார்த்தைகளோ, தும்மலோ கேட்காமல் இருப்பதற்காக கெட்டிமேளம் கொட்டப்படுகின்றது.

அரசாணிக் காலுக்குப் பலர் பலவித மரங்களைப் பாவிக்கிறார்கள். மூங்கில் உறுதிக்கு உரமாகவும் நேர்மைக்கு நேராகவும் வளரக் கூடியது. மூங்கில் குறுகிய காலத்தில் அழியக் கூடிய விருட்சம் அல்ல. அரச மரமும் வேர் ஒன்று இருந்தால் போதும். அழிப்பது கஷ்டம். நமது வாழ்க்கை இந்த அடிப்படையில் அமைய வேண்டும் என்ற தத்துவங்களுக்கு உதாரணமாக நமது முன்னோர்கள் இவற்றை தெரிவு செய்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

சில இனங்களில் வேறு விதமான மரங்களை நடுகிறார்கள். அவற்றுக்கு வேறு விதமான தத்துவ விளக்கங்கள் இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறாயினும் மூங்கிலும் அரசும் சிறந்ததாகவே பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். அரசாணிக்கால் நட்டவுடன் ஐயர் அர்ச்சனை மந்திரம் சொல்லி சக்தியேற்றுவார்.

## மாமன் ஆசீர்வாதம் வழங்குதல்

மாப்பிள்ளையை ஒரு அறையில் அல்லது ஓரிடத்தில் நிறுத்தி அங்கு பூசை செய்து முதலில் மாமன் பொட்டு வைத்து மாலை அணிவித்து தலைப்பாகை அல்லது தொப்பியை அணிவித்து ஆசீர்வாதம் செய்து தலைப்பா பணம் கொடுப்பார். இப்போது தலைப்பாகை அணிவிக்காததால் பணத்தைக் கொடுத்து ஆசி கூறுவார்கள். பிறகு தாய், தந்தை சுற்றத்து ஆண்கள், சுமங்கலி அல்லாத பெண்கள் மாலையிட்டு ஆசீர்வாதம் செய்த பின்பு மாப்பிள்ளையை மணவறைக்கு மாப்பிள்ளைத்தோழன் அழைத்துச் செல்வார்.

பெண்கள் ஆடவனுக்கு மாலை போடுவதில்லை. அவர்களுக்கு அடை சுற்றி வாழ்த்துத் தெரிவிக்கும் முறை இருக்கிறது. தவிர ஒரு பெண் ஆசைக்கு கணவனுக்கும், அன்புக்கு மகனுக்கும் மட்டுமே மாலையிடுவாள். பெண் கணவனிடத்தில் மட்டும் ஆசைப்பட முடியும். அதுபோல் தனது மகனிடத்தில் அதிக அன்பு செலுத்துவார்கள். மற்றவர்களிடத்தில் எவ்வளவு கூடுதலாக அன்பு வைத்திருந்தாலும் மகனை விட இரண்டாவது அன்பாகத்தான் இருக்கும். பொது இடங்களிலும் - அரசியலிலும், மத வைபவங்களிலும் ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் பூச்செண்டுகளைக் கொடுத்தே வாழ்த்துவார்கள். விதவைப் பெண்களுக்கு மறுமணம் கிடையாது. அவர்கள் தாம்பத்திய உறவில் இருந்தும் ஆசாபாசங்களில் இருந்தும் நீங்கி விட்டார்களாதலால் இவர்கள் மாலையிட்டு வாழ்த்துவார்கள். பெரியோர் என்ற நிலையில் பெண்ணை விட வயதில் கூடியோர் மாலையிட்டு வாழ்த்தி ஆசீர்வதிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் தந்தையர் பிள்ளைகளிடத்தில் அன்பு வைத்திருப்பதுபோல் பிள்ளைகள் பெற்றோரிடத்தில் பாசம் வைத்திருப்பார்கள். எனவேதான் தாய் மகனுக்கு அன்பின் நிமித்தம் மாலையிட்டு வாழ்த்துவாள். திருமணத்திற்கு எல்லோரையும் வாழ்த்த வரும்படி அழைக்கிறோம். வந்தவர்கள் எல்லோரும் ஒவ்வொருவராக, ஆண்கள் மாலையிட்டும் பெண்கள் அடைசுற்றியும் வாழ்த்த வேண்டும். சிலவேளை பெண்கள் மாலையும் போட்டு அடையும் சுற்றுவதால், நேரம் போதாமல் சில முக்கியமானவர்கள் அடை சுற்றி வாழ்த்த முடியாமல் போகிறது.

## அரசு படைத்தல்

மாப்பிள்ளையை மணவறைக்கு அழைத்து வந்தபின் மாப்பிள்ளையின் பங்காளிகள் மூவரில் ஒருவர் பொங்கல் எடுத்து தட்டில் வைத்து தனது இடது பக்கம் உள்ளவர் மூலமாக அரசு படைப்பவரிடம் கொடுக்க வேண்டும். அதே பொங்கல் தட்டை வலது பக்கம் உள்ளவர் மூலமாக வாங்கி மீண்டும் பொங்கல் எடுத்து ஐந்து இலைகளுக்கும் கொடுக்க வேண்டும்.

பொங்கலுடன் நெய், பழம், தேங்காய்க்கீற்று, சக்கரை முதலியன வைத்து ஐந்து படையல்கள் இடம் பெறும். முதலாவது இலை பொங்கல் நான்முகனுக்கும், இரண்டாவது திருமாலுக்கும், மூன்றாவது சிவனுக்கும், நான்காவது திசைக்காவலருக்கும், ஐந்தாவது ஒன்பது கோள்களுக்கும் (நவக்கிரகங்கள்) என்னும் விதத்தில் இடம்பெறும். இவை பஞ்ச மூர்த்திகளுக்கு என்றும் சொல்லப்படுகின்றன.

சில பகுதிகளில் பெண்கள் - பொங்கல் எடுத்துக் கொடுக்கிறார்கள். அதன் விபரத்தை சிலர் இவ்வாறு கூறுகிறார்கள். பெண்கள் தான் சமைப்பவர்கள். சமைத்தவர்கள் தான் எடுத்துப்போட வேண்டும் என்பார்கள். யார் எடுத்தாலும் தவறு என்று சொல்லமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் இதனைச். செய்வதற்குக் காரணம் கல்யாணக்காரரர்களின் பங்காளிகள் யார் என்று மற்றோர் அறிவதற்காகவும் அவர்களுடைய ஒற்றுமை குலையாமல் ஒன்று சேர்ந்து இருப்பதைக் காட்டுமுகமாகவும் அமையும். ஆண்கள் பிறக்கும் போதும் மறையும் போதும் ஒரே கோத்திரம்தான். பெண்கள் பிறக்கும்போது ஒன்று, வாழ்க்கைப்பட்டு போகும் இடம் இன்னொன்று, மூன்று பெண்கள் இருந்தால் அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி கோத்திரமானவர்களாக இருப்பார்கள். முற்காலத்தில் விறகு உடைக்கவும் தங்களது பங்காளிகளைத்தான் அழைப்பார்கள். இவை யாவும் ஒற்றுமைக்காகவே இடம் பெறுகின்றன.

## அடைசுற்றுதல்

பெண்கள் அடை சுற்றும்போது தமது கைகளில் அடை எடுத்து அடையுடன் கை உடலில் படும் போது பாச உணர்வுகளுடன் வாழ்த்துவதை குறிக்கும். மருத்துவ மனையில் பெண்கள் தாதிகளாக இருக்கிறார்கள். அவர்களுடைய சேவை பாசமாகிறபடியால் நோயாளிகட்கு மகிழ்ச்சியினால் பாதி நோய் குணமாகிறது. இது போன்று தான் பெண்கள் அடை சுற்றுவதுமாகும். முதலில் நிறை செம்பை எடுத்து இடது கைப்பெருவிரலினால் மேல் பகுதியையும், மற்றைய விரல்களினால் அடிப்பகுதியையும், வலது கைப்பெரு விரல், ஆள்காட்டி விரல் என்பவற்றால் செம்பின் மேல் பக்க வாயிலும் பிடித்துக் கொள்ள வேண்டும். செம்பின் அடிப்பகுதி அப்படியே இருக்க வேண்டும். ஆட்டுக்கல்லில் அரிசியைப் போட்டு ஆட்டினால் அடிக்குழலி அப்படியே இருக்க மேல் பகுதி நாலாப்பக்கமும் சென்று வரும். அது போல் செம்பின் மேல் நீர் அசையும். அடிப்பகுதி நீர் அப்படியே இருக்கும். இது போன்று நெல்படி அசையும். நெல் அசையாது. அடையை இருகைகளில் எடுத்து முழங்கால், இடுப்பு, புஜம் இரு பக்கமும் அரவணைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியில் கும்பிட வேண்டும். அடை சுற்றி வாழ்த்துவதில் கவிதைப்பாடல்:-

அடி தளராது நுனி தளர்ந்து
கனி நெல் மணி போல்
அன்போடு அரவணைத்து
ஆசி கூறி வாழ்த்துகிறேன்.



மாலை போட்டு வாழ்த்துவதிலும் பார்க்க அடைசுற்றி வாழ்த்துவதில் பெரிய தத்துவமே அடங்கியுள்ளது. ஒரு மரம் அடியில் நன்றாக வேர் பிடித்து உறுதியாக இருந்தால் மேல்பகுதி எத்தகைய சூறாவளி காற்றுக்கும் தாக்குப் பிடித்து உறுதியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெல் அளப்பு நிகழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முகூர்த்தக்கால் நடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கும். களனியில் இடும் நெல் நன்றாக விளையக்கூடியதும் முனை முறியாத முதல் தரமானதுமாகும். அந்த நெல் அடியில் வேர் பிடித்துக் கொண்டால் கிளை பிரிந்து தளதளவென்று வளர்ச்சியடையும். ஒரு கட்டிடத்திற்கு அடியில் அஸ்திவாரம் தளராமல் உறுதியாய் இருந்தால் வீடும் நீண்ட காலத்திற்குத் தாங்கும். இதுபோல் தான் அன்போடு அரவணைத்து ஆசி கூறுகின்றதும்.


எல்லாப் பெண்களும் வாழ்த்திய பிறகு தாய், மாப்பிள்ளையின் கையில் வெற்றிலை வைத்து நிறை செம்பின் அடியை இடக்கையால் பிடித்து, வலது கை விரல்களால் செம்பின் மேல் பகுதியை மூடி, விரல்களின் வழியாக நீர் கொஞ்சம் கொஞ்சமாக வரும்படி செய்து, வெற்றிலையில் விழ, கைக்கு நீர் வார்ப்பார்கள். மணவறையை மூன்றுமுறை வலம் வந்து, வெளியில் சனி மூலையில் (வடகிழக்கு மூலை) சென்று, மாமனின் பாதங்களை வாய் நீரினால் கழுவி வாயின் பாலினால் பாதஅபிஷேகம் செய்வார். மீண்டும் பாதத்தில் நீர் ஊற்றி கழுவுவார். இது மாமனிடம் உள்ள பாச உரிமையாகும். மாப்பிள்ளைக்கு வெற்றிலை, விராட்டி, நெல் என்பனவற்றை சுளகில் இட்டு, திருஷ்டி சுற்றி, மணவறைக்கு வந்து, அரசாணிகால் செழித்து வளர தண்ணீர் ஊற்றிச் செல்வார். பெண்ணும் இதே மாதிரி செய்வார். இது குடும்ப வாழ்க்கையில் இனிமேல் பணிவாகவும், வளைந்து கொடுத்தும், வாழ வேண்டும் என்பதைப் போன்ற சிந்திக்க வேண்டிய நிகழ்ச்சியாகும். அடை சுற்றும் பெண்களுக்கு அடை சுற்றி முடித்து வரும்போது வெற்றிலை பாக்கு, வழங்கி மரியாதை செய்வது வழக்கமாகும். இதேபோன்று எந்த வித மாற்றமும் இல்லாமல் ஒரு அறையில் பெண்ணை நிறுத்தி மாமன் மாலை போட்டு ஆசீர்வாதம் செய்து பெண்ணின் பங்காளிகளால் பொங்கல் எடுத்து, அரசு படைத்து, அடை சுற்றி, மாமனுக்கு பால் அபிஷேகம் செய்து அரசுக்கும் தண்ணீர் ஊற்ற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பு என்ற கங்கணம் கட்டுதல்

மாப்பிள்ளை மணவறைக்கு வந்து பின்னர் ஐயர் காப்பு என்ற கங்கணம் கட்டுவார். அவ்வேளை உரல், அரசாணிப் பானை, அரசாணிக்கால் ஆகியவற்றுக்கும் காப்பு கட்டுவார். இந்தக் காப்பு கல்யாணம் முடியுமட்டும் தீயசக்திகள் கெடுத்து விடாமல் இருப்பதற்காக பாதுகாப்பாக விளங்குகிறது. முன்பு ஒரு கிழமை வரை அரசு படைத்து முடியாமல் இருப்பது வழக்கம். அதுவரை மாப்பிள்ளையோ, பெண்ணோ வெளியில் போகாமல் இருக்க முடியாதாகையால், இந்தக் காப்பு அவசியமாகும். சுவாமிக்கு நற்காரியங்கள் செய்யும்போது கூட அதைக் கெடுக்கவும் பல தேவதைகள் தருணம் பார்த்துக் கொண்டிருக்கும். அவற்றையெல்லாம் தடுக்கத்தான் இந்தக் காப்பு. மாப்பிள்ளைக்கு பிறகு பெண்ணுக்கும் காப்புக் கட்டுதல் இடம்பெறும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாப்பிள்ளை கோவிலுக்கு செல்லுதல்

மாப்பிள்ளையும் பங்காளிகளும் சுற்றத்தாரும் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்குத் தட்டுடன் கூறைச்சேலை (சேலைத் தலைப்பில் ஒரு ரூபாய் பணம் முடிந்து) தாலிக்கொடி என்பவற்றையும் வைத்து சூடம், எண்ணெய், உப்பு சிதரு தேங்காயுடன் விநாயகர் கோவிலுக்குச் சென்று தாலிக்கும், கூறைச்சேலைக்கும் ஆசீர்வாதம் பெற்று வழிபாடு செய்து விநாயகருடைய ஆசீர்வாதத்தால் வினையும் விக்கினங்களும் இல்லாது சிதறுண்டு போக வேண்டும் என்று வேண்டி, சிதறு தேங்காய் அடித்து, பூசை செய்து வருவார்கள். கிராமங்களில் கோவிலில் பூசகர் எப்போதும் இருப்பதில்லை. ஆகவே விளக்கேற்றுவதற்கு எண்ணெயும் தீப்பெட்டியும் கொண்டு செல்வது வழக்கம்.


## மாப்பிள்ளைக்கு மிஞ்சி அணிவித்தல்

மாப்பிள்ளை மணவறையை விட்டு வெளியே கோவிலுக்குச் சென்று வருவதால் ஆரத்தி எடுக்க வேண்டும். அதற்கு முன், வாசலில் கொழுந்திமார்கள் "எமது சகோதரியை நீங்கள் கல்யாணம் செய்தபின் எந்தப் பெண்ணும் உங்கள் எதிரில் நிற்காமல் விலகிச் செல்வதற்காக இந்த மோதிரத்தை கால் விரலுக்கு அணிவிக்கிறோம்" என்று கூறும் பாவனையில் மாப்பிள்ளையின் கால்விரலுக்கு தண்ணீர் பால் ஊற்றி சந்தனம் குங்குமம் வைத்து மிஞ்சி அணிவிப்பார்கள். மிஞ்சி நழுவி விழாமல் இருப்பதற்காக தேங்காயின் பாரத்தைக் கொண்டு தட்டி நெருக்கமாக்கி விடுவார்கள். ஒரு ஆடவன் திருமணம் செய்தால் கால் விரலில் மிஞ்சி அணிய வேண்டும். ஏனெனில் பெண்கள் எப்பொழுதும் குனிந்த நிலையில் நடமாடுவார்கள். அவ்வாறு நடக்கும்போது எதிரில் ஒரு ஆடவனைக் கண்டால் காலில் மிஞ்சி இருப்பதைப் பார்த்தவுடன் இவர் கல்யாணமாகியவர் என்பதை அறிந்து ஒதுங்கியிருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோல் ஒரு ஆடவன் எப்பொழுதும் நிமிர்ந்து நடமாடுவார். இவரது பார்வையில் பெண்ணின் கழுத்தில் உள்ள தாலி தெரிகிறது. அவள் அந்நியன் மனைவி என்று நினைக்கத்தோன்றுகிறது. இத்தத்துவங்களினால் எக்குறையும் இல்லை. பெண்கள் சிறு வயதிலேயே மிஞ்சியும், தண்டையும், கொலுசும் அணிந்து கொள்கிறார்கள்.



இவ்வேளையில் மாப்பிள்ளையின் சகோதர சகோதரிகளுக்கும், உறவினர்களுக்கும் புதுப் புடவைகள் வழங்குவார்கள்.

## பெண்ணுக்கு மிஞ்சி காலாலி பீலாலீ அணிவித்தல்

ஆரத்தி எடுத்து மாப்பிள்ளை மணவறைக்கு வந்ததும், பெண்ணை அழைத்து உப்பில் கால் வைத்திருக்க மாப்பிள்ளையின் சகோதரி (நாத்தனார்) முறையானவர் காலாலி, பீலாலி இரண்டையும் கால்விரலில் அணிவிப்பார். நான் குடும்ப வாழ்வில் கடமையோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாடாகவும் நடந்து கொள்வேன் என்று நினைத்து உப்பில் சத்தியம் செய்வதாகும். தாலிக் கொடியை பூசையில் வைத்துவிட்டு தேங்காய், பழத்தட்டை சேலையுடன் பணமுடிப்பும் சேர்த்து பங்காளிகள் யாராவது பெண்ணின் கையில் கொடுக்க தாயார் உதவியுடன் வாங்கிக் கொண்டு போய் உடுத்தி வருவார். பெண் மணவறைக்கு வரும் வரை ஐயர் சக்தி சிவனுக்குப் பூசை செய்வார். சிலர் நவக்கிரகம் வைத்து ஒன்பது தேங்காயுடன் பூசை செய்வர். சக்தி சிவனுக்குள்ளே ஒன்பது கிரகங்களும் அடங்கி விடுகின்றன.

பெண்ணுக்கோ, மாப்பிள்ளைக்கோ சில கிரகதோஷம் இருந்தால் அந்தக் கிரகத்துக்கு ஐயரிடம் சொல்லி கிரகப் பிரீதி செய்து கொள்வார்கள். சக்தியும் சிவனுக்கும் நமக்கு அறிவையும் ஆக்கத்தையும் கொடுத்துக் காப்பாற்ற கூடிய தெய்வங்கள். எனவே சக்தி, சிவனுக்கும் பூசை செய்து அக்னிதேவனுக்கு ஹோமம் செய்வார்கள். இச்சமயம் நவக்கிரக சக்திகளுக்கு வேண்டிய பொருட்களை நவதானியமாக ஹோமத்தில் இடுவார்கள். நவதானியம் வாங்கும்போது ஒவ்வொரு கிரகத்திற்கும் உகந்ததாக எடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவக்கிரகங்களும் அவற்றுக்குரிய பொருட்கள் நிறங்கள் என்பவற்றின் விபரங்கள்**

| நவக்கிரகங்கள் | தானியங்கள் | ஆடையின் நிறங்கள் | சமித்துக் குச்சிகள் | பூக்கள் |
|---|---|---|---|---|
| 1. சூரியன் | கோதுமை | சிவப்பு | எருக்கு | செந்தாமரை |
| 2. சந்திரன் | அரிசி, பச்சைநெல் | வெள்ளை | பலாசு | வெள்ளை அல்லி |
| 3. செவ்வாய் | துவரை | சிவப்பு | கருங்காலி | சிவப்பு செண்பகம் |
| 4. புதன் | பாசிப் பயறு | பச்சை | நாயுருவி | வெண்காந்தன் |
| 5. குரு | குத்துக்கடலை | மஞ்சள் | அரசு | மஞ்சள் பூ |
| 6. சுக்கிரன் | மொச்சை | வெள்ளை | அத்தி | வெண்தாமரை |
| 7. சனி | எள் | கறுப்பு | வன்னி | கருங்குவளை |
| 8. இராகு | கொள்ளு | நீலம் | அறுகு | மந்தாரை |
| 9. கேது | உளுந்து | பஞ்சவர்ணம் | தர்ப்பை | பலவர்ணப்பூ |

மேற்கூறிய தானியங்களுடன் சமித்துக்குச்சியும் நெய்யும் ஊற்றி இருவரும் தங்களது பாவங்களை மன்னித்து காத்தருள வேண்டும் என நினைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிதேவதைகளும் நவரத்தினங்களும்

| | | |
|---|---|---|
| சூரியன் | சிவன் | மாணிக்கம் |
| சந்திரன் | பார்வதி | முத்து |
| செவ்வாய் | முருகன் | பவளம் |
| புதன் | பெருமாள் | பச்சை |
| குரு | பிரம்மன் | புஷ்பராகம் |
| சுக்கிரன் | லஷ்மி, இந்திரன், வருணன் | வைரம் |
| சனி | யமன் | நீலம் |
| இராகு | காளி, துர்க்கை | கோமேதகம் |
| கேது | விநாயகன் | வைடூரியம் |

## கோத்திரம் சொல்லுதல்

மாப்பிள்ளையின் தகப்பனார் கிழக்கு முகமாகவும் பெண்ணின் தகப்பனார் மேற்கு முகமாகவும் உட்கார்ந்து தாங்களே விபூதி தரித்துக் கொள்ள வேண்டும். முதலில் மாப்பிள்ளையின் தகப்பனார் பெண்ணின் தகப்பனாருக்கு பொட்டு வைக்க வேண்டும். இதே முறையில் மாலையும் அணிவித்துக் கொள்ள வேண்டும். தாய்மார்களும் முறையே பொட்டு வைத்துக் கொள்ள வேண்டும். நமது கலாச்சாரத்துக்கு ஏற்றவாறு கிராமப் பகுதிகளில் இருக்கும் குருக்கள் ஐயர் கோத்திரம் கேட்கும் முறை சரியாக இருக்கிறது. சில இடங்களில் அந்தந்தப் பகுதி பழக்கப்படி கேட்டுக் கொள்கிறார்கள். ஆயினும் பின் வருமாறு கேட்பதே வழக்கமான-தும் முறையானதும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோத்திரம் சொல்வதற்கும் ஆசீர்வாதம் அளிப்பதற்கும் தகுதி பெற்றவர்களாக இருக்க வேண்டும். ஒருவரிடம் ஆசீர்வாதம் பெற வேண்டுமானாலும் தன்னை விட வயதில், அறிவில், அனுபவத்தில், மிகுந்தவர்களாக இருக்க வேண்டும். சில இடங்களில் தவறான முறைகளில் காரியங்கள் நடப்பதை பார்க்கலாம். உதாரணமாக பெற்றோருக்குப் பதில் தனது சகோதரன் அவரது மனைவி இருவரையும் எடுத்துக் கொள்வோம். மாப்பிள்ளைக்கு 30, 35 வயது இருக்கும். சகோதரனின் மனைவிக்கு 25, 30 வயது இருக்கும். இவருக்கு மாப்பிள்ளை பாதபூஜை செய்யலாமா? சகோதரனின் மனைவி தன்னிலும் வயது கூடிய மாப்பிள்ளையிடம் பாதபூஜை செய்வித்துக் கொள்வது எவ்வளவு பெரிய பாவச்செயல். இந்த மாதிரியானவைகளை பற்றி யாரும் சிந்திப்பதில்லை. பெண்ணுக்கோ மாப்பிள்ளைக்கோ தாய் தந்தை இருந்தாலும் தகப்பன் வழி பாட்டனும் பாட்டியும் உயிருடனிருந்தால் தாய் தகப்பன் கோத்திரம் சொல்லிக் கொள்ள மாட்டார்கள். பெரிய குரு இருக்கும் போது சிறிய குருவிடம் ஆசீர்வாதம் பெற்று கொள்வார்களா?

## கோத்திரம் கேட்டல்

பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டார் இருபாலாருக்கும் திருமணத்திற்கு ஐயர் ஆசீர்வாதம் கூறிய பின்பு

ஐயர் : - கந்யாம் கணக சம்பந்தம் மாப்பிள்ளையின் கோத்திரம்.......?

மாப்பிள்ளையின் தகப்பனார் : - சிவ கோத்திரம்

ஐயர் : - சிவகோத்திரத் பவாய இமாம்வராய மாப்பிள்ளையின் பாட்டனார் பெயர்......?

மாப்பிள்ளையின் தகப்பனார் : - ஆதிசிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயர் : - ஆதிசிவம் நாமதேசிய இமாம்வராய பௌத்திரன், மாப்பிள்ளையின் தகப்பனார் பெயர்: -

மாப்பிள்ளையின் தகப்பனார்: - சங்கரன்

ஐயர்: - சங்கரன் நாமதேசிய இமாம்வராய புத்திரன், மாப்பிள்ளையின் பெயர்.....?

மாப்பிள்ளையின் தகப்பனார் : - முருகன்



ஐயர் : - முருகன் நாமதேசிய இமாம்வராய கந்யாம் கநக சம்பந்தம், பெண்ணுடைய கோத்திரம்......?

பெண்ணின் தகப்பனார் : - அனாதி கோத்திரம்

ஐயர் : - அனாதி கோத்திரத்பவாய இமாம், கந்யாம் பெண்ணுடைய பாட்டனார் பெயர்....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின்
தகப்பனார் :- ஆதி சேஷன்

ஐயர் :- ஆதிசேஷன் நாமதேசிய இமாம் கந்யாம் பௌத்திரி பெண்ணுடைய தகப்பனார் பெயர்....?

பெண்ணின்
தகப்பனார் :- நம்பிராஜன்

ஐயர் :- நம்பிராஜன் நாமதேசிய இமாம் கந்யாம் புத்திரி பெண் பெயர்......?

பெண்ணின்
தகப்பனார் :- வள்ளி

ஐயர் :- வள்ளி நாமதேசிய இமாம் கந்யாம் கனக சம்பந்தம் மாப்பிள்ளையின் கோத்திரம்......?

இவ்வாறாக மூன்று தடவை கூறி வள்ளி என்ற கன்னிகையை முருகன் என்கிற வரனுக்கு அம்மி சாட்சியாய், அரசாணி சாட்சியாய் அக்கினி சாட்சியாய், முப்பத்து முக்கோடி தேவர்கள் சாட்சியாய் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் சாட்சியாக, தேவப்பிராமணாள் சாட்சியாக, உற்றார் உறவினர்கள் சாட்சியாக, அலங்காரமாய், சந்தோஷசமாய் பாணிக்கிரகணம் செய்து கொடுத்தேன் என ஐயர் கூறும் வார்த்தைகளை பெண்ணின் தகப்பனார் கூற மாப்பிள்ளையின் தகப்பனார் வாங்கிக் கொண்டேன் எனக் கூறவேண்டும். இருவரும் இவ்வாறு மூன்று முறை கூறி வெற்றிலை, பாக்கு, மாற்றி பெற்றுக் கொள்ள வேண்டும்.

பெண்ணும் மாப்பிள்ளையும் தங்களது பெற்றோர்களுக்கும் பாத பூஜை செய்து பாத நமஸ்காரம் செய்வார்கள். பெற்றோர்கள் அட்சதை எடுத்து (அரிசியாலும் புஷ்பத்தாலும்) ஆசீர்வதிப் பார்கள். அடுத்து தாரை வார்த்துக் கொடுத்தலில் மாப்பிள்ளையின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை கீழேயும் அதையடுத்து முறையே மேல் நோக்கி மாப்பிள்ளையின் தகப்பனார் தாய், பெண், பெண்ணின் தகப்பனார், தாய் பழுதில்லாத வெற்றிலையில் கெட்டி மேளத்துடன் தண்ணீர் ஊற்றுவார். பாத பூஜை செய்யும் போது தனது தாயோ தகப்பனோ சுமங்கலி அல்லாதவரானால் அவருக்கும் பாதபூஜை செய்யப்படுவதுண்டு.

## தாலி ஆசீர்வாதம்

தாம்பாளத்தில் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, புஷ்பங்களுடன் தாலியை வைத்து சபையோர்களிடம் ஐயர் கொண்டு செல்வார்.

தாம்பாளத்தில் தாலியுடன் கற்பூரம் ஏற்றி சபையோர் சாமிதரிசனம் செய்ய அனுப்புவதில்லை.

சபையோருக்கு தாலியை ஆசீர்வாதம் செய்வதற்கு மாத்திரம் தான் அனுப்புவார்கள்.

## தாலி கட்டுதல்

ஆசீர்வாதம் பெற்றவுடன் மாப்பிள்ளை முதலில் பெண் கழுத்தில் மாலை சூடுவார். அடுத்து பெண் மாப்பிள்ளைக்கு மாலை சூடுவார். பின் மாப்பிள்ளை பெண்ணின் கழுத்தில் மங்கல நாண் (தாலி) பூட்டுவார். அடுத்து பெண்ணும் மாப்பிள்ளையும் தோழிகள் கழற்றிக் கொடுக்க மாலைகளை மூன்று தடவை மாற்றி மாற்றிப் போடுவார்கள். பின் மாப்பிள்ளை தனது வலது கையை பெண்ணின் பின்புறமாகக் கொண்டு வந்து பெண்ணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைத்தபடி நெற்றியில் விபூதி பூசி ஆசீர்வதிப்பார். பெண் தனது கணவனான தாலிக்கு திலகம் இடுவார்.

"மாங்கல்யம் தந்துநாநேனம்
மனதீவண ஹேதுநாம்
ஹண்டே பத்நாமி சுபஹே
ஸ்வஞ்சீவ தரஸஸ்வகம்"

என சமஸ்கிருதத்தில் ஐயர் சொல்லுவார். அதன் தமிழ் விளக்கம்:-

தனது கழுத்தில் இருக்கும் இந்த மாங்கல்யம்.
தனது கணவன் பெரும் புகழோடும்,
மன நிம்மதியோடும் இருக்க வேண்டும்
என நினைத்து பெண் தாலிக்கு திலகம் இடுவார்.

இங்கு முக்கியமானது தாலியிலும் பார்க்க மாலையேயாகும். எனவே மாலையைத்தான் முதலில் சூட வேண்டும். ஒருவருக்கொருவர் மாலை சூடாவிடில் எத்தனை மாலைகள் அணிந்திருந்தாலும் அது சிறப்பாகாது. தாலிகட்ட முடியாவிட்டாலும் மாலையைச் சூடி திருமணம் செய்து கொள்ளலாம்.

தாலி கட்டும்போது மாப்பிள்ளையின் சகோதரி கைவிளக்கு ஏற்றி வெளிச்சம் கொடுப்பார். இது பற்றிய விளக்கம் முற்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. பின்பு இருவரும் தங்களது சுண்டு விரல் இரண்டையும் கோர்த்து இடையில் விடுபடாமல் இருப்பதற்காக சிறிய துண்டு டவலினால் கட்டுவிப்பார்கள். இருவரும் தோழன் தோழியுடன் மூன்று முறை வலம் வரும்போது ஒவ்வொரு சுற்றுக்கும் அம்மியை மிதித்து மேலே நிமிர்ந்து பார்த்து வர வேண்டும்.

பெண் ஒருவனுக்கு மனைவியாகிவிட்டபடியால் அவளது கற்பு உறுதியாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துவதாகவும், கற்பிலிருந்து பிறழ்பவர்கள் கல்லுக்குச் சமமாகக் கருதப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலராலும் மிதிக்கப்படுவார்கள் என்பதை உணர்த்துவதாகவும் அம்மிக்கல் விளங்குகிறது.

அடுத்து கற்பில் சிறந்த பெண்ணான அருந்ததி எனும் நட்சத்திரம் வானில் ஒளிவீசுவதைப் பார்த்தாயா? எனும் பாவனையில் வானத்தைப் நிமிர்ந்து பார்ப்பதாகும். இன்னும் சில ஐதீகங்களும் உண்டு. அதாவது அருந்ததியும் வசிஷ்டரும் போல ஆணும் பெண்ணும் இணைபிரியாது இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பதாக விரல்களை இணைத்து வலம் வருவதைக் கூறுவார்கள். முற்காலத்தில் இரவில் திருமணங்கள் நடைபெறுவதால் விடியற்பொழுதில் அருந்ததி நட்சத்திரமும் வசிஷ்ட நட்சத்திரமும் ஒன்றுக்கொன்று சமீபமாகச் செல்வதைக் காணலாம். எனவே இத்தத்துவங்கள் மணமக்களுக்குத் தெரியாவிட்டாலும் பெரியவர்கள் வழி நடத்த வேண்டும். இருவரையும் உள்ளே ஓரிடத்திற்கு அழைத்துச் சென்று பாலும் பழமும் சாதமும் சேர்த்து ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ள விடவேண்டும். அத்துடன் குழந்தை ஒன்றை மாப்பிள்ளையின் கையில் கொடுத்து பெண்ணிடம் கொடுத்து வாங்க விட வேண்டும். மாப்பிள்ளையின் மூலமாக பெண் ஒரு குழந்தையைப் பெறவும் மாப்பிள்ளை பெண்ணின் மூலமாக ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்ளவும் மணமக்கள் இருவரும் பரஸ்பரம் ஒருவரோடொருவர் பழகுவதற்கும் ஏதுவாகும்.

இதுவரை உள்ளத்தால் நினைத்திருந்தவர்கள் உடலைத் தொட்டுப் பழகுவதற்கு ஏற்ற நிகழ்ச்சியாகும். மனிதர்கள் பழக்கம் இல்லாத ஒருவருடன் பழகும்போது சிறிது சிறிதாக பழகித்தான் பெரிய பழக்கத்திற்கு வரவேண்டும். இது மணமக்களுக்கும் பொருந்தும்.

முற்காலங்களில் உறவினர்கள் உறவு விடாமல் இருக்க மாமன், அத்தை, ஒன்றுவிட்ட சகோதரி என்ற உறவில் திருமணம் செய்து கொள்வார்கள். ஒருவருக்கொருவர் நன்கு பழகியும் புரிந்துணர்வோடும் இருப்பார்கள். குழந்தை மாற்றும் நிகழ்ச்சி முடிவடைந்ததும் பெண்ணையும் மாப்பிள்ளையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணவறைக்கு அழைத்து வந்து மாப்பிள்ளையின் தாய் பெண்ணுக்கு மாமியார் என்ற முறையில் மாமி பட்டம் கட்டுவார். இது தனது பொறுப்பில் சிலவற்றை ஒப்படைப்பது என்ற பாவனையில் அமையும். இது தவிர மாமியார் தன்னிடம் உள்ள பொன் பொருள் சூழ்ந்த கோட்டை என்று சொல்லும் வண்ணம் குடும்பத் தொழிலாளியினால் வைக்கோலை வேஷ்டியில் சுற்றி வைத்திருப்பது கிராமங்களில் 'கோட்டையைக் கொடுத்தல்' என்பார்கள்.

தாலி கட்டியவுடன் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் நலுங்கு பாட்டுப் பாடி இருவருக்குரிய முறை மைத்துனிகள் குதூகலிப்பார்கள். இந்த நிகழ்ச்சி இன்றும் கிராமங்களில் நடைபெறுகிறது

கல்யாணம் கல்யாணம்,
என்றைக்கோர் கல்யாணம்,
வெள்ளிக்கிழமையிலே,
விடியரெண்டு நாளிருக்க
திங்கள் கிழமையிலே
சிவன் பிறந்த நாளை யிலே,
கல்யாணம் என்று சொல்லி
கடல் ஏறி பாக்கு வைத்து
எட்டாத ஊருக்கெல்லாம்
ஏணி கொண்டு பாக்கு வைத்து
பத்தாத ஊருக்கெல்லாம்
பரணி கொண்டு பாக்கு வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக்கு மிளகு கொண்டு
உரம்பரைக்கும் பாக்கு வைத்து
ஆழாக்கு மிளகு கொண்டு
ஐவருக்கும் பாக்கு வைத்து
சின்ன மடிகோலி
சீமை எங்கும் பாக்கு வைத்து,
பெரிய மடிகோலி
பிராமணர்க்கும் பாக்கு வைத்து
மூங்கிலைத் தரித்து,
மூர்த்தக்கால் செப்பனிட்டு
தென்னை இலை தரித்து,
தெருவெல்லாம் அலங்கரித்து,
வாழை மரந் தரித்து,
வளைவெல்லாம் அலங்கரித்து
கனுவுக்கு கனுவு
காந்தா மணிவிளக்கு,
தூணுக்கு தூணு
தூண்டா மணிவிளக்கு,
ஆனைய குளிப்பாட்டி
கட்டுங்கய்யா பந்தலிலே,
ஆனைக்கு உண்டான
அரிசி படி நாங்க தர்றோம்,
குதிரையை குளிப்பாட்டி
கட்டுங்கய்யா பந்தலிலே,
குதிரைக்கு உண்டான
கொள்ளுபடி நாங்க தர்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாப்பிள்ளைக்கு உறவினர்கள் அறிமுகம்

மாப்பிள்ளைக்கு அவரது மாமியாரும் மாமி முறையானவர்களும் மாமி பணம், வைத்து அறிமுகம் செய்து கொள்வார்கள். அப்பொழுது தனக்கு எத்தனை மாமியார்கள் அவர்கள் யார் என்றும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு மாப்பிள்ளைக்கு ஏற்படுகிறது. இது போன்று கொலுந்தியார்களும் பணம் வைப்பார்கள். பின்பு பெண்ணின் சகோதரனான மைத்துனர் மாப்பிள்ளையின் முன் அமர்ந்து தனக்குத் தானே மாலை அணிந்து கொண்டு விபூதி, சந்தனம், குங்குமம் இட்டுக் கொண்டு மாப்பிள்ளைக்கு விரலில் சந்தனம் குங்குமம் பூசி மோதிரம் அணிவிப்பார். மோதிரம் அணிவித்த மைத்துனருக்கு வேஷ்டி சால்வை - வழங்கி மரியாதை செய்து கௌரவிப்பார். மாப்பிள்ளையானவர் முதலில் பெண்ணுக்கு சேலை கொடுத்தார். பின் பெண்ணின் சகோதரருக்கு வேஷ்டி கொடுக்கிறார். அன்றே உறவு வலுப்படுகிறது. பின்பு சகலை யார் என்பதை அறியும் வண்ணம் சகலை பணம் கொடுத்தல் இடம் பெறும். இவரும் தனக்குத்தானே மாலையணிந்து பொட்டு வைத்து தாம்பாளத்தில் தேங்காய் பழம் வெற்றிலை பாக்குடன் பணம் வைத்துக் கொடுப்பார். இதன் பின்பு மொய் எழுதுதல் நடைபெறும். உற்றார் உறவினர் யாவரும் பணமும் பொருளும் அன்பளிப்பாக கொடுப்பார்கள். பின் பெண்ணும் மாப்பிள்ளையும் சூரிய நமஸ்காரம் செய்வார்கள். அப்போது மாப்பிள்ளை பெண்ணிடம் “அம்மி மிதித்து அருந்ததி கண்டாயா?” என்று கேட்பார். பெண், ‘கண்டேன்’ எனக் கூறுவாள். பின் இருவரும் கிராமத்தில், நகரத்தில், கோவிலில், ஊர்வலம் சென்று சுவாமி தரிசனம் செய்வார்கள். முற்காலங்களில் ஊர்வலம் செல்லும் போது உறவினர் வீடுகளில் சென்று ஆரத்தி எடுத்து பால் பழம் அருந்தி வருவார்கள். கோவி-லுக்குச் சென்று வரும்போது பஞ்ச ஆரத்தி எடுப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாலி கட்டுதல்



கடலில் (குடத்தில்) சங்கு, முத்து எடுத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவாதிரை சீர்வரிசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூழ் படைத்து நீர்நிலைக்கு செல்லல்

## உறவு முறைகள் விளக்கம்

மாப்பிள்ளைக்கு மாமியார் பணம் வைப்பது, பெண்ணின் தாயாரும் பெண்ணின் தந்தை வழி சித்தாப்பாமார், பெரியப்பாமார்களின் மனைவியர்களும் ஆகும். கொழுந்தியார் பணம் வைப்பது பெண்ணின் சகோதரிகளும் பெண்ணின் தந்தை வழி கொழுந்திமார்களும் வைப்பது ஆகும். மைத்துனர் மோதிரம் போடுவது ஒருவர்தான். குடும்பத்தில் எல்லா மைத்துனர்களும் மோதிரம் போட்டார்களானால் மாப்பிள்ளைக்கு விரல்கள் போதாமல் போகும். பெண்ணுக்கு நாத்திப்பணம் வைத்து பிறைகட்டுவது மாப்பிள்ளையின் சகோதரிகளும் தந்தை வழி சகோதரிகளும் ஆகும்.

சகலை பணம் போடுவது ஒருவர்தான். எல்லா உறவினர்களையும் அறிமுகப்படுத்திக் கொள்வதற்காகவே இந்தப் பணம் வைப்பு முறை வைபவம் இடம்பெறுகிறது. மாமன் என்பவர் தாய்வழி சகோதரர் ஆவர். சிலர் விளக்கமில்லாமல் தங்களது சகோதரிகளின் கணவன்மார்களையும் மாமனாகக் கருதுகிறார்கள். அவர்கள் நம்வீட்டுக்கு மாப்பிள்ளையாக வந்தவர்கள். அன்றும் இன்றும் என்றும் மாப்பிள்ளைதான். ஒருவரை பெயர் சொல்லாமல் முறை வைத்து அண்ணன், தம்பி, மாமன், மச்சான் என அழைக்கிறோம். அதற்காக அவர்களை அண்ணனாகவோ தம்பியாகவோ, மாமனாகவோ, மச்சானாகவோ வைபவங்களுக்கு ஏற்றுக்கொள்வது முறையல்ல. தங்களுக்கு உறவு முறையானவர்கள் இல்லாவிடில் கோத்திரத்தின் மூலமாக அவர்களைத் தெரிவு செய்யலாம்.

## கூழ் (அரசு) படைத்தல்

முற்காலத்தில் அரசு படைத்து திருமணத்தை முடிக்க மூன்று நான்கு தினங்களாகும். தற்காலத்தில் உடனடியாகவே அரசு படைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்தை நிறைவு செய்கிறார்கள். பெண்ணையும் மாப்பிள்ளையையும் மணவறையில் நிறுத்தி அரசு படைப்பவர் பொங்கல் எடுத்து இலையில் வைத்து நெய், சக்கரை, பழம், தேங்காய்க்கீற்று வைத்து பெண், மாப்பிள்ளை ஆகியோரின் ஆபரணங்களில் ஒவ்வொன்றும் இலையில் வைத்து வாத்தியங்கள் சகிதம் பூஜை செய்வார். பூஜை முடிந்து மாப்பிள்ளையின் சகோதரிமார்கள் பெண்ணுக்கு தாம்பாளத்தில் பணம் வைத்து நாத்திப்பிறை கட்டுவார்கள். இது பிறைச் சந்திரனைப் போன்ற உருவமாக இருக்கும். மணப்பெண் சந்திரனைப் போல் குளர்ச்சியாகவும், அமைதியாகவும் இருந்து இவ்வீட்டுக்கு தான் வரும் போதும் அன்புடன் இருக்க வேண்டும் என்ற பாவனையில் செய்யும் காரியமாகும்.

### நாத்திபிறை நலுங்கு பாடல்

நவாப்பழ துளிர்போல
நாலு லட்சம் நாத்தி பொற
மூங்கில் துளிர்போல
மூணு லட்சம் நாத்தி பொற
பொற கட்டவாறேன்
பொண்ணே தலை நிமிரு.
மாலை எடுத்து போட
மாமா தலை நிமிரு
முக்காலி மேலே ஏறி,
முத்து பொற கட்ட வாறேன்
நாற்காலி மேல ஏறி
நாத்தி பொற கட்ட வாறேன்.

இப்படியாக சொல்லி மகிழ்வார்கள்.

கங்கனம் என்ற காப்பை அவிழ்த்து விட வேண்டும். இலையில் வைத்த ஆபரணங்களை அரசானிப் பானையில் இடவேண்டும். பெண், மாப்பிள்ளை ஆகியோர் தோழன் தோழியுடன் மணவறை சுற்றி வரும்போது ஒவ்வொருமுறை சுற்றுக்கும் அரசானிக் காலை அசைத்து பானையில் இருக்கும் சங்கு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபரணங்களை இருவரும் சேர்ந்து கைவிட்டு துளாவி எடுக்க வேண்டும். இதில் யார் எப்பொருளை எடுக்க வேண்டும் என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் இருவரும் நெருங்கிப் பழகுவதற்கு ஏற்ப ஒரு நிகழ்ச்சியாக இது அமைகின்றது. திருவாதிரைக் கல்யாணமாக இருந்தால் அந்த அரசாணிப் பானையையும் வைத்துப் படைக்க வேண்டும். அரசாணிக்காலை எடுத்து வைத்தபின் முளைப்பாரி, பொங்கல் ஆகியவற்றையும் பெண் அரசானிப்பானை ஒன்றையும் எடுத்துக் கொண்டு கிணறு, ஆறு, நீர் நிலைகளுக்குச் சென்று சேர்த்து விட்டு பானையில் தண்ணீர் கொண்டுவந்து வீட்டில் புகுமுன் ஆரத்தி எடுத்துப் புக வேண்டும்.

## மறுவீடு அழைப்பு

கல்யாண மண்டபத்தில் இருந்து மாப்பிள்ளை வீட்டுக்கு செல்ல வேண்டியிருந்தால் அது ஒரு அழைப்பு ஆகாது. பெண் வீட்டுக்கு பணம் வைத்து அழைப்பதுதான் முதல் அழைப்பு.

நமது சமூக வழக்கமாக பெண்ணை மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்து வந்து திருமணம் செய்வதே இடம் பெறுகிறது. ஆகவே கோயில்கள் மண்டபங்களில் திருமணம் செய்தாலும் அந்த இடம் மாப்பிள்ளையின் வீடுதான். அடுத்த மறுவீடு பெண் வீடுதான். இரண்டாவது மறுவீடு மாப்பிள்ளையின் வீட்டுக்கு அழைத்தல் ஆகும். மூன்றாவது சனியாறுக்கு பெண் வீட்டுக்கு அழைத்துச் செல்லல் ஆகும். இத்துடன் மூன்று அழைப்புகளும் முடிந்து விடுகின்றன.

சில இடங்களில் அன்றைய தினம் பெண் வீட்டுக்கு அழைத்துச் செல்ல வசதி இல்லாமல் இருக்குமானால் கோவிலில் அல்லது மண்டபத்தில் திருமணம் நடைபெற்ற இடத்தில் இருந்து ஒரு பகுதியை பெண்வீடாக கருதி பெண் வீட்டார் மாப்பிள்ளைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்காய் பழத்தட்டுடன் பணம் வைத்து அழைக்க வேண்டும். பெண் வீடாக நினைத்து அழைத்துச் சென்ற பெண் மாப்பிள்ளையை மாப்பிள்ளை வீட்டுக்கு பணம் வைக்காமல் அழைத்துச் செல்வார்கள். அச்சமயம் பெண்ணும் மாப்பிள்ளையும் வணக்கம் கூறி கும்பிடும் போது "கும்பிடு பணம்" வைத்துக் கொடுப்பார்கள். அத்துடன் சனிநீர் சம்பந்தம் போட்டுக் கொள்வார்கள். பெண்ணையும் மாப்பிள்ளையும் மூன்று முறையாக அழைத்து வந்தாலும் முதன் முறையாக வீட்டில் நுழைகின்றபொழுது பஞ்ச ஆரத்தி எடுத்து அழைக்க வேண்டும்.

## சனிநீர் (சனியாறு) விருந்து

பெண் வீட்டில்தான் இந்த சனிநீர் (சனியாறு) விருந்து என்பது நடைபெறும். இதனை சனிநீராடல் என்றும் கூறுவர். மாப்பிள்ளை பெண் வீட்டில் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தல் இடம்பெறும். ஆண்கள் எண்ணெய் தேய்த்து குளிக்க உகந்த நாள் சனிக்கிழமை. பெண்களுக்கு உகந்த நாள் வெள்ளிக்கிழமை. பெண் வீட்டில் முதல் முறையாக மாப்பிள்ளைக்கு பண்டிதர் (நாவிதன்) ஒருவர் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து கௌரவிக்கிறார்கள். பெண்ணுக்கு பிறந்த வீடானபடியால் வேறொருவர் எண்ணெய் தேய்த்து விடுவதில்லை. எனவே மாப்பிள்ளைக்கு உகந்த நாளான சனிக்கிழமையன்று மாப்பிள்ளையும் பெண்ணும் ஸ்நானம் செய்து பெண்ணின் வீட்டிலிருந்து கோவிலுக்கு சென்று சுவாமி தரிசனம் செய்து வருவார்கள். வீட்டில் பல்லாங்குழி விளையாடுதலும் இருவரும் பழகுவதற்கு ஏற்றதொரு நிகழ்ச்சியாகும். சம்பந்திகள் இருவரில் பெண் வீட்டார் கிழக்கு முகமாகவும் மாப்பிள்ளை வீட்டார் மேற்கு முகமாகவும் இருந்து விபூதி தரித்து பொட்டு வைத்துவிட வேண்டும். மாலை அல்லது பூச்சரம் போட்டுக் கொண்டு வெற்றிலை பாக்கு மாற்றிக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்தன்று மணமகன் வீட்டார் கிழக்கு முகமாக உட்கார்ந்திருந்தார். எனவே இப்போது பெண்வீட்டில் பெண் வீட்டார் கிழக்கு முகமாக உட்கார வேண்டும். அடுத்து மணமகன் வீட்டில் நடைபெறும் விருந்து சம்பந்தி (சமபந்தி) விருந்தாகும். திருமணத்தன்று மாப்பிள்ளை வீட்டிற்கு பெண்வீட்டார் வந்தபோது விருந்தளித்தார்கள். சனிநீறன்று மாப்பிள்ளை வீட்டார் பெண்வீட்டிற்கு வரும்போது பெண் வீட்டார் விருந்தளிக்கிறார்கள். மீண்டும் மாப்பிள்ளை வீட்டில் இரு பகுதியினரும் சமபந்தியில் (சம்பந்தி) விருந்து சாப்பிடுவார்கள். இருபகுதியினரும் மஞ்சள் நீராடி மகிழ்வார்கள்.

## மணமகன் பற்றி....

மணமகன் தனக்குரிய இல்லாளை தன் வீட்டிற்கு அழைத்து வந்தவுடன் இருவீட்டு உறவுகளும் மேலோங்கி வளர பெண் வீட்டுக்கு முடிந்த உதவிகளை செய்ய வேண்டும். பெண் வீட்டார் மணமகனுக்கு மருமகன் என்ற உயர்ந்த அந்தஸ்தை அவருக்கு கொடுக்கிறார்கள். அதிலும் உயர்வாக நாம் (மணமகன்) அவர்களுக்கு மரியாதை செய்து அவரது கஷ்டங்களையும் குடும்ப பாரங்களையும் குறைக்க வேண்டும். அப்போது நாம் பாரத்தை சுமக்கும் வல்லமையுடையவர்களாகவும், பெரியவர்களாகவும் உயர்ந்தவர்களாகவும் திகழ முடியும். பெண் வீட்டில் இருந்து வாங்கும் சக்தியுடன் இருந்தால் நமது கை கீழே போகும். வாங்குவது குறைவாகவும் கொடுப்பது கூடுதலாகவும் இருப்பின் கொடுக்கும் கைகள் மேலே உயர்ந்து நிற்கும். பெற்றுக் கொள்ளும் கைகள் கீழேயே தான் இருக்கும். இது போன்று தான் நமது நெஞ்சங்களும். அதற்கு கடவுள் துணை செய்வார். மணமகன் எந்த இடத்திலும் நமக்கு மேல் ஒருவன் இருக்கிறான் என்று நினைக்க வேண்டும். நான் எனது என்ற ஆணவத்தை அகற்றி வாழ வேண்டும். ஆணவம் இருந்தால் அறிவு குறைவு என்பார்கள். ஆணவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவைத்தரும். பெரியோர்களின் ஆசியைப் பெற முடியாது. நல்ல நண்பர்களையும் பெற முடியாது.

நண்பர்களில் மூன்று வகையானவர்கள் இருக்கின்றார்கள். 1.பனை மரம் போன்றவர்கள். 2. தென்னை மரம் போன்றவர்கள். 3. வாழை மரம் போன்றவர்கள்.

பனை மரம் யாராலும் நடப்படுதில்லை. பனம் பழத்தை யாரும் தேடி எடுத்து புதைத்து வைப்பதில்லை. தானாக முளைக்கிறது. தனக்குக் கிடைத்த தண்ணீரைப் பெற்று வளர்கிறது. தனது உடலையும், ஓலையையும் நுங்கையும் உலகிற்குத் தருகிறது. அதுபோல நம்மிடம் எந்த உதவியையும எதிர்பாராமல் நமக்கு உதவுகிறவன் பனைமரம் போன்ற நண்பன்.

தென்னை மரம் நம்மால் நடப்படுகிறது. அதற்கு அடிக்கடி தண்ணீர் ஊற்றி வளர்த்தால்தான் அது நமக்குப் பலன் தருகிறது. அதுபோல நம்மிடம் அவ்வப்போது உதவி பெற்றுக்கொண்டு நண்பனாக இருக்கிறவன் தென்னை மரத்துக்குச் சமமான நண்பன்.

வாழைமரமோ நாம் தினமும் தண்ணீர் ஊற்றிக் கவனித்தால்தான் நமக்குப் பலன் தருகிறது. அதுபோல தினமும் நம்மிடம் உதவி பெற்றுக் கொள்கிறவன் வாழை மரத்தைப் போன்ற நண்பன். இந்த மூவரில் பனைமரம் போன்ற நண்பனே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டிய நண்பனாவான். நல்ல மனைவியை எப்படி இறைவன் அருளுகிறானோ அப்படியே நல்ல நண்பர்களையும் அருளுமாறு இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும்.

## மணமகள் பற்றி.....

மணமகள் தனக்குத் தகுந்த நாயகனை இறைவன் தேடிக்கொடுத்தான் என எண்ணவேண்டும். ஏனெனில் மேல் நாட்டவர் போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடக்கணக்கில் பழகி பின் தனது விருப்பத்திற்கு கணவனை தேடிக் கொள்வது போன்றதல்ல. பெற்றோர்கள் தம் பிள்ளைகள் சீரும் சிறப்புடன் இருக்க வேண்டுமென்றே நினைப்பார்கள். எனவே இறைவனை நம்பித்தான் மணாளன் கிடைக்கும் பாக்கியத்தை பெறுகிறாள்.

மாப்பிள்ளை வீட்டில் எக்குறை இருந்தாலும் வருங்காலத்தில் தான் ஒரு வீட்டுத்தலைவி என்பதை நினைத்து குடம்ப வாழ்க்கையை சிறப்பாக நடத்திட வேண்டும். அதற்கு மிகவும் தேவையானது பொறுமை. தேவையற்றது பொறாமை. பெண்ணானவள் தன் பிறந்த வீட்டை பற்றிப் பேசி பெருமைப்படக்கூடாது. மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்றவுடன் தலைவியாகிவிட முடியாது.

ஒரு மாணவன் படித்து முடித்தவுடன் அதிபராகிவிட முடியாது. தொழிலாளர்கள் வேலையில் சேர்ந்தவுடன் அதிகாரிகள் ஆகிவிட முடியாது. சிஷ்யன் உடனடியாக குருவாகிவிட முடியாது. எல்லாவற்றுக்கும் ஒரு பக்குவ நிலை இருக்க வேண்டும். இவை இல்லாவிடில் அழித்தும் அழிந்தும் விடுவார்கள்.

குடும்ப வாழ்வு சிறப்படைய பெண்கள் சிறப்பாகவும் பொறுப்பாகவும், பொறுமையாகவும் இருக்க வேண்டும். அப்போது பிறந்த வீட்டின் பெருமையை மற்றவர்கள் பேசக் கேட்கலாம். தன் தாய் வீட்டில் குழந்தையாக, பிள்ளையாக, பெண்ணாக இருந்தவள் புகுந்த வீட்டில் மனைவியாக மாறுகிறாள். தாலியைக் கட்டியவுடனும் பிள்ளையைப் பெற்றவுடனும் மட்டும் மனைவியாகி விட முடியாது. மனைவி என்ற சொல்லுக்கு மூன்று இலட்சணங்கள் உண்டு. ஆகவே மனைவியாக விளங்குவதற்கு கணவனிடத்தில் மூன்று இலட்சணங்களையும் கடைப்பிடித்தல் வேண்டும். 1. தாயை போலவும் 2. வேலைக்காரியைப் போலவும் 3. தாசியைப் போலவும் இருக்க வேண்டும். தாயைப்போல் என்று சொல்வது ஒரு தாயிடம் பிள்ளை எதிர்பார்ப்பது அன்பு. ஒரு தாய் பிள்ளைக்கு அதாவது மகனுக்குத்தான் அதிகம் அன்பு செலுத்துவாள். எனவே தாய் மகனுக்கு அன்பு மட்டும்தான் தரமுடியும். தாயிடத்தில் மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்காரி போன்று வேலை வைக்க முடியாது. 2. வேலைக் காரியிடம் மகன் வேலையை மட்டும் செய்யும்படி சொல்ல முடியும். அன்பைப் பெற்றுக்கொள்ள முடியாது. வேலை முடிந்தவுடன் அவள் போய்விடுவாள். 3. தாசியாக இருப்பவள் படுக்கையறையில் மட்டுமே இருப்பாள். வேறு வேலையையோ அன்பையோ எதிர்பார்க்க முடியாது. ஆதலால் மனைவியே தாயைப் போல் அன்பையும் வேலைக்காரியைப் போல் பணிவிடைகள் செய்யவும், தாசியைப் போல் பள்ளியறையில் இன்பமளிப்பவளாகவும் இருக்க முடியும். எனவே மனைவியானவள் மூன்று இலட்சணங்களையும் கணவனிடத்தில் உடையவளாக இருக்க வேண்டும்.

அதனால் மனைவி என்ற பெருமை மிக்க சொல்லைக் காப்பாற்றுபவளாக வாழ வேண்டும். குடும்பம் சீரும் சிறப்புமாக வாழ்வதற்கு பெண்ணுக்கு அறிவும் அறிவுறையும் தேவைப்படுகின்றது என்பதை பெண்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

"கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்" என்பது இந்துக்களின் பழமொழி. உன் கணவன் மனது கல்லானாலும் அவன் உனக்கு கணவனே. சம்பாதிக்க முடியாத சக்தியற்ற கோழை யாக ஊருக்கு உபயோகமற்றவனாக வெறும் புல்லை போல இருந்தாலும் அவன் உனக்கு புருஷன்தான் என்பது பொருள். இவற்றையெல்லாம் பெண்கள் மனதில் கொள்ள வேண்டும். பெண்கள் குடும்பத்தில் ஆலோசனை சொல்வதில் மந்திரியைப் போலவும், அழகில் லட்சுமியைப் போலவும், பொறுமை, மன்னிப்பு என்பவற்றில் பூமாதேவியைப் போலவும், அன்பில் அன்னையைப் போலவும், மஞ்சத்தில் கணிகையைப் போலவும், வேலை செய்வதில் கணவனுக்கு அடிமையைப் போலவும் நடந்து கொள்ள வேண்டும். கணவனுக்கு என்னென்ன நேரங்களில் என்னென்ன தேவை என்பதைத் தெரிந்து அந்தக் கடமைகளைச் செய்ய வேண்டும்.

பூ மலர்வதும் ஒரு தடவை. பூவையர் மனப்பதும் ஒரு தடவை என்பதை சிந்தித்துக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமக்களுக்கு.....

மணமக்கள் தம்மைப் பற்றியும் தமது பெற்றோர், கணவன், மனைவி, சகோதர சகோதரிகள் ஆகியோர்களைப்பற்றியும் பெருமையாகச் சொல்லிக் கொள்ளக் கூடாது. ஆனால் மற்றவர்கள் இவர்களைப் பார்த்து பெருமைப்படும்படியாக நடந்து கொள்ள வேண்டும்.

மணமக்களாகிய இருவரும் சிறந்த அறிவுரைகளைப் பெற்று நன்மக்களைப் பெற்று கற்றும் கற்பித்தும் சமூதாயத்தில் நற்பெயர் எடுத்து அகிலமதில் நோயின்மை, கல்வி, தனம், தானியம், அழகு, புகழ், பெருமை, இளமை, அறிவு, சந்தானம், வலிமை, துணிவு, வாழ்நாள், வெற்றி, நல்லூழ், நுகர்ச்சி எனப்படும் பதினாறு செல்வங்களும் பெற்று பெரு வாழ்வு வாழ இறைவனை வணங்குவோமாக.

'தாரமும் குருவும் தலைவிதிப்படியே'.

## தற்கால திருமணத்தைப் பற்றி சிறிது நேரம்....

திருமண முறைகள் பற்றி பத்தொண்பதாம் நூற்றாண்டின் முற்பகுதிகளில் நம் முன்னோர்கள் செய்தவை பற்றி அறிந்தோம். முற்காலத்தில் ஆறு நாட்கள் திருமணம் நடத்தினார்கள். அன்றைய நிலையில் அவை சிறந்தவைதான். அக்காலத்தில் நம் சமூகத்தினர் மிகவும் குறைவு. ஒரே இடத்தில் வாழ்க்கை நடத்தினார்கள். பலர் ஒன்று கூடி வேலை செய்து கொள்ள வசதியாகவும் வாழ்ந்தார்கள்.

விறகு உடைக்க, நெல் வேக வைக்க, பெண்பார்க்க, நிச்சயதார்த்தம் செய்ய, மணவறை திண்ணை போட்டு நெல் அளக்க, பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பு, விருந்து, திருமணம், சனிநீர், சம்பந்தம் என பல நாட்களுக்கு பலர் கூடி வேலை செய்தார்கள். ஆறு நாட்களில் சிறிது சிறிதாகச் செய்து முடித்தார்கள்.

தற்காலத்தில் நமது சமூகத்தினர்களும் உறவினர்களும் பல மைல்களுக்கு அப்பால் சென்று வாழ்கிறார்கள். முன்பு, ஒரு திருமண வீட்டில் நூறுபேர் கூடினால் அது பெரிய கூட்டம். இன்று ஐநூறு, ஆயிரமாக கூடுகிறோம். சமூக உறவினர்களுடன் நண்பர்கள், தொழில் மூலமாக அறிமுகமானவர்கள் என ஏராளமானவர்களை அழைக்கிறோம்.

இன்று ஓய்வு என்பதே இல்லாத வேகமான காலம். எல்லா நிகழ்ச்சிகளையும் ஒரே நாளில் செய்வதால் பலருக்கு சிரமமாக இருக்கும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். விலை கொடுத்தும் வாங்க முடியாத காலத்தையும் நேரத்தையும் வீணாக்குகிறோம்.

ஒரே நாளில் நடைபெறும் ஒரு திருமணத்திற்கு காலை 6 மணி முதல் பகல் 2 மணிவரை 8 மணி நேரத்தை செலவிட வேண்டியுள்ளது. ஒரு திருமணத்திற்கு ஐநூறு பேர் வந்திருந்தால் வந்தவர்கள் எல்லோரும் சேர்ந்து சுமார் மூவாயிரம், நாலாயிரம் மணி நேரத்தை செலவிடுகிறோம். ஆகவே திருமணமுறை நிகழ்ச்சிகளைக் குறைக்காமல் கால நேரத்தை மறு சீரமைத்துச் செய்யலாம் என்பதே பலருடைய விருப்பமாகும். அதுவே சரியானதுமாகும்.

அவற்றில் எனது சிந்தனைக்கு எட்டியவை:-

1. நெல் அளப்பு நிகழ்ச்சியை உறவினர்களோடும் உள்ளூர் பக்கத்து மக்களுடனும் சேர்ந்து முதல் நாளோ இரண்டு நாள் முன்னதாகவோ அவரவர் வசதிப்படி வைத்துக் கொள்ளலாம். உள்ளூர் என்பது குடியிருக்கும் ஊர்.

2. திருவாதிரை இருந்தால் பெண் அழைப்போடு செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. முகூர்த்தக்கால் ஊன்றியவுடன் மாப்பிள்ளைக்கு பெற்றோ-ருடன் சேர்த்து ஒன்பது அல்லது பதினோரு பேர் மாலையிட்டு மணவறைக்கு வரலாம்.

4. இதுபோன்று அடை சுற்றுவதிலும் தாயுடன் ஒன்பது அல்லது பதினொரு பேர் அடை சுற்றலாம்.

5. வந்திருப்பவர்கள் ஐநூறு, ஆயிரமாக இருந்தாலும் தாலியை ஆசீர்வதித்து வாழ்த்தலாம். இதற்கு 15 நிமிடம் போதுமான-து. இவ்வாறு நேரத்தைக் குறைத்து மொத்தமாக கிரக சுபநேரம் வரக்கூடிய ஒன்றரை, ஒன்றேமுக்கால் மணி நேரத்தில் முகூர்த்தம் நடைபெறலாம். அடுத்த இரண்டுமணி நேரத்துடன் விருந்துண்டு நிறைவேற்றலாம்.

சனி நீராடல், பெண்ணும் மாப்பிள்ளையும் சனி நீராடி கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து வரும் இப்புனித நன்னாளில், இலங்கையில் தனவந்தர்கள் என்றும், பெரும் கௌரவம் என்றும், நாகரிகம் என்றும் நினைத்து அசைவ உணவு அளிக்கிறார்கள். இவ்வாறு செய்வது ஒரு பழக்கமாகி இதுவே நாளடைவில் வழக்கமாகிறது. இப்படியானவற்றைத் தவிர்த்து தேவையாயின் வேறொரு தினம் ஒதுக்கி வைக்கலாம். எல்லாவற்றையும் அன்பர்கள் சிந்தனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே அடியேனின் வேண்டுகோள்.

சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org